**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 6 ✧ இதழ்-8 ✧ மார்ச் 2024

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**



தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org


# தொழிலும் தொழிலாளர்களும் இருகண்கள்! களம் புகுவோம்! வெற்றி பெறுவோம்!!

வணக்கம் தோழர்களே!

**தீ**பாவளிக்கும் பொங்கலுக்கும் முறையே போனஸும் பரிசும் தருவதுபோல 12.02.2024ல் தீபாவளியும் 05.03.2024ல் பொங்கலுமாக தமிழக மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களுக்கு போனஸும், பரிசும் கிடைத்திருக்கிறது.

அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி போல பதவி ஒழிப்பு உத்தரவுகள் வந்த வண்ணமே உள்ளன. தலைமை பொறியாளர் (பணியமைப்பு) அலுவலகத்தில் உள்ள Personnel Officer (Post Sanction) என்ற பதவியின் பெயரை (Post Abolition) என மாற்றியமைத்துக் கொள்வது சாலச் சிறந்ததாக அமையும்.

மின்சார உற்பத்தியையும் அல்லது தேவையின் அடிப்படையில் அண்டை மாநிலங்களிலிருந்து நிரந்தரமாகவும், தற்காலிகமாக வாங்குவதையும் விநியோகம் செய்து நுகர்வோரிடத்தில் கொண்டு சேர்க்க பாலமாக உள்ளது துணை மின்நிலையங்கள் என்ற அடிப்படைத் தன்மையை அறியாமலா BP எண் 4 நாள்: 05.03.2024ல் வெளியிடப்பட்டுள்ளது என்பது கேள்விக்குறி! கமிட்டியில் உள்ளவர்களெல்லாம் மின்சார வாரியத்தில் பணியேற்றக் காலத்திலிருந்து கடந்து வந்த பாதையை பார்க்க மறந்துவிட்டார்கள் போலும்! பாவம் இவர்கள் என்ன செய்வார்கள்!!! எய்தவர் எங்கோ இருக்க அம்பை நோவதேன் என்று சொல்லிவிட முடியாது!!! கமிட்டிதான் முழு காரணமாக அமைந்து 62 EE, 220 AE பதவிகளையும், மின்வாரிய பாரம்பரியத்தையும் ஒழித்துள்ளது என விரல் நீட்டி குற்றம்சாட்ட நமக்கொன்றும் தயக்கமோ அச்சமோ இல்லை!

GO 100க்கு ஒப்பந்தம் போடுமுன்னே GO 6 மற்றும் 7 24.01.2024ல் அவசர கோலத்தில் அரசாங்கம் வெளியிட்டு TANGEDCOவிற்கு மூடு விழா நடத்தியுள்ளது என்பதை அறிந்தும் அறியாமலும் புரிந்தும் புரியாமலும் தெரிந்தும் தெரியாமலும் 12.02.2024ல் முத்தரப்பு ஒப்பந்தம் நிறைவேறியுள்ளது.

இது மட்டும்தானா இன்னும் வாங்கிக் கொள் என்பதுபோல சூரிய ஒளியில் மின்சாரம் உற்பத்தி செய்ய AE, AEE எல்லாம் வீட்டின் மேல் பேணல் போட வேண்டும், எஞ்சிய தொழிலாளர்கள் ஊருக்குள் சென்று 100 பேரை பிடித்து வர வேண்டும் என்று மத்திய அரசின் திட்டத்தை மாநிலத்தில் நிறைவேற்ற அச்சுறுத்தி ஆணை பிறப்பித்தல் ஒரு பக்கம், இதை மின்வட்டங்களில் உள்ள நிர்வாகத்தினர் நடைமுறைப்படுத்திட எடுத்திடும் அதிகார செயல்பாடுகளுக்கு அளவில்லாமல் உள்ளதையும் பார்க்க முடிகிறது.

Mobile Appல் கணக்கீடு செய்ய சொல்லி அச்சுறுத்தும் அவல நிலை, Mobile or Tab, internet connection எதுவும் தராமல் Appஐ பயன்படுத்த சொல்லி அச்சுறுத்துவது நியாயமா? அதிகாரத்திற்கு அளவில்லையா என்ற கேள்வி எழுகிறது. திருவாரூர் மின்வட்டம் மன்னார்குடி கோட்டம் கூத்தாநல்லூர் பிரிவு அலுவலகப் பொறியாளர், கணக்கீட்டாளர் ஒருவருக்கு Mobile App வைத்து எடுக்க முடியாத நிலையை தெரிவித்ததற்கு துறைரீதியான நடவடிக்கை ஏன் எடுக்கக் கூடாது என துரை கணக்கில் நோட்டீஸ் கொடுத்துள்ளார் இந்த துரைக்கு யார் அதிகாரம் தந்தார் என்பதும் கேள்விக்குறி!

12.02.2024 முத்தரப்பு ஒப்பந்தத்திற்கும், BP 05.03.2024ற்கும் நமது எதிர்ப்பை முறையே 28.02.2024 மற்றும் 08.03.2024 ஆகிய இரு நாட்களும் தமிழகம் முழுவதும் பதிவு செய்துள்ளோம். தொழிலாளர்கள் திரண்டெழுந்து அநீதிக்கு நியாயம் கேட்டு போராடியுள்ளோம்.

கண்டன ஆர்ப்பாட்டங்கள் தானே! கோரிக்கை ஆர்ப்பாட்டங்கள் தானே! நடக்கட்டும் பார்த்துக் கொள்ளலாம் என நிர்வாகம் கவலையற்று இருக்குமானால் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதை மெய்ப்பிப்போம்.

31.03.2024 நடைபெறவுள்ள செயற்குழுவில் தேவையான முடிவுகளை எடுத்து தொழிலைப் பாதுகாக்க, தொழிலாளர்களை பாதுகாக்க, தொடர்ந்து களத்தில் நிற்போம்! வெற்றி பெறுவோம்!

*- ஆசிரியர்*

## மாநில செயற்குழு கூட்டம்

நாள் : **31.03.2024, ஞாயிற்றுக்கிழமை**

நேரம் : காலை 09.00 மணி

இடம் : **உண்ணாமலை திருமண மண்டபம்**
**திருவண்ணாமலை**

# துணை மின்நிலையங்களில் பதவிகள் பறிப்பு - வாரிய உத்தரவு

**(ABSTRACT)**

TANTRANSCO - Review of staff pattern in Non-Workload areas - Reveiw of Staff pattern for technical posts in Sub-Stations as per the recommendation of the Committe - Orders issued.

---

**(ADMINISTRATIVE BRANCH)**

**(Per.) FB TANGEDCO Proceedings No. 04** **Dated : 05.03.2024**
Maasi - 22, Sobakiruthu Varudam
Thiruvalluvar Aandu 2055

**Read:**

1) (Per.) CMD TANGEDCO Proceedings No. 78, (Secretariat Branch), Dated : 05.05.2020.
2) From the CE/Grid Operation/Chennai Letter No. CE/Grid Operation / Chennai Letter No. CE/GO/EA/F.Non-Workload Committee/D.No. 183/23, dated : 24.03.2023.
3) Minutes of the 122nd Board Meeting of TANGEDCO held on 06.02.2024.

*****

**PROCEEDINGS :**

In the Proceedings first read above, orders were issued to constitute a Committee to review the staff pattern in Non-Workload areas. Accordingly, the staff pattern of technical staff (non-workload posts) for the various Sub-Stations of 110 kV, 230 kV, 400 kV and 765 kV has been reviewed by the Committee under the chairmanship of the Chief Engineer/ Grid Operation/ Chennai. The said Committee has forwarded its report after the detailed study of the present nature of duties and responsibilities of the posts in Sub-Stations. The report of the Committee has been examined in detail and submitted before the Board of TANGEDCO for approval.

2) The Board of TANGEDCO have accorded approval for implementing the recommendation of the said Committee as follows:-

i) One SE/ Operation has to look after the Operation Circles of the respective Region. At present, there are 10 Nos. of Operation Circles available for the existing 12 Regions including the 3 newly formed Regions, i.e., Karur, Thanjavur and Thiruvannamalai.

The existing SE/ Operation/ Chennai/ North be re-designated as "SE/ Operation/ Chennai".

The existing SE/ Operation/ Chennai/ South be redeployed as "SE/ Operation/ Thiruvannamalai".

2 Nos. of SE/ Operation Circles to be formed by redeployment of posts for the remaining 2 newly formed Regions, i.e., Karur and Thanjavur.

ii) One Executive Engineer/ Operation has to look after one 765 kV Sub-Station and One Executive Engineer/ Operation has to look after one 400 kV Sub-Station, considering the bulk power handling and connection with National Grid.Other than 765 kV and 400 kV Sub-Stations, One Executive Engineer/ Operation has to look after all the 230 kV and 110 kV (Grid  Non-Grid) Sub-Stations in each Distribution Circle.

The details of the Executive Engineers/ Operation to look after all the 230 kV and 110 kV Sub-Stations in the Distribution Circles are furnished at Annexure-I.

The remaining excess posts of Executive Engineers in Sub-Stations shall be kept for redeployment to the newly formed Divisions/ new Sub-Stations or to the needy places.

iii) Each AEE/ Maintenance/ 230 kV Sub-Station has to look after 4 Nos. of 110 kV (Non-Grid) Sub-Stations additionally and each AEE/ Maintenance/ 110 kV (Grid) Sub-Station has to look after 10 Nos. of 110 kV (Non-Grid) Sub-Stations additionally in the respective Circle.

The Circle-wise admissibility of AEE (Maintenance) for 230 kV and 110 kV Sub - Stations as per recommendation of the Committee is furnished. in the Annexure-II enclosed.

iv) One AE/ Maintenance of 110 kV (Non-Grid) Sub-Station has to look after two 110 kV (Non-Grid) Sub-Stations in the respective Circle.

The admissibility of AE (Maintenance) for 110 kV (Non-Grid) Sub-Stations as per recommendation of the Committee is furnished in the Annexure-II enclosed.

The excess posts of Assistant Engineer/ Maintenance in 110 kV (Non-Grid) Sub-Stations shall be kept for redeployment to the needy places.

3) In respect of the existing Assistant Engineer and Assistant Executive Engineer posts already sanctioned for attending the shift duties in the Sub-Stations, the existing staff pattern remains unaltered.

4) The orders for formation of 2 Nos. of Operation Circles for the newly formed Regions (Karur and Thanjavur) by redeployment of posts will be issued separately.

5) The Superintending Engineers of Operation Circles and Superintending Engineers of Distribution Circles are directed to allocate the posts to the Sub-Stations as per the above staff norms recommended by the Committee and to identify the Executive Engineers, Assistant Executive Engineers (Maintenance) and Assistant Engineers (Maintenance) to be retained to look after the maintenance of the Sub - Stations of their respective Circles and to furnish the details of excess posts of Executive Engineers/ Assistant Engineers to this office immediately for issuing orders for redeployment to the needy areas.

(BY ORDER OF THE BOARD OF TANGEDCO)

Encl.: Annexure I  II.

**K. MOZHIARASI**
CHIEF ENGINEER/ PERSONNEL

# வாரியத்திற்கு நமது கடிதம்

நாள் : 11.03.2024

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

பொருள் : **மின்சார வாரியம் - பணி நிலைகளில் மாற்றங்கள் அறிவிப்புகள் - பதவிகளில் மாற்றம் செய்தல் - உத்தரவுகள் - தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்த - கோருதல் தொடர்பாக.**

பார்வை : **1) (Per) FB TANGEDCO Proceedings No. 04 Dt. 05.03.2024.**

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவின் வாயிலாக 1 மேற்பார்வை பொறியாளர், 62 செயற்பொறியாளர்கள் உட்பட 220 உதவி பொறியாளர்களை உபரியாக்கியும் மற்றும் 44 உதவி செயற்பொறியாளர்களை கூடுதலாக அனுமதிக்கும் வகையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

765 KV, 400 KV, 230 KV, 110 KV துணை மின்நிலையங்களின் செயல்பாடு, பராமரிப்பு இவைகளில் ஆட்குறைப்பு செய்யும் வகையில் வரப்பெற்றுள்ள உத்தரவு இத்தனை ஆண்டு காலம் நடைமுறையிலிருந்த செயல்பாடுகளை கேள்வி குறியாக்கியுள்ளது. கமிட்டியினுடைய முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

சமீப காலமாக வேலைப்பளு பகுதிக்குட்பட்ட பதவிகளானாலும், வேலைப்பளு பகுதிக்குட்படாத பதவிகளானாலும் தன்னிச்சையாக பதவிகளை ஒழித்திடும் போக்கு தொடர்வது கவலைக்குரியதாக அமைந்துள்ளது.

துணை மின்நிலையங்களில் பணியாற்றும் களப்பணியாளர்களுக்கு பணியும், பாதுகாப்பும் மற்றும் பணி சம்மந்தமான நிர்வாக தொடர்புகளும் மேற்கண்ட பதவிகள் குறைப்பதால் மாறிடும் நிலை உருவாகும் என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம். (துணை மின்நிலையங்களில் பொறியாளர்களும், களப்பணியாளர்களும் இணைந்துதான் பணியாற்றுகிறார்கள்)

குறிப்பாக பணி நிலைகளிலும் பதவிகளிலும் மாற்றங்கள் ஊதிய உயர்வு மற்றும் வேலைப்பளு ஒப்பந்த காலங்களில் நடந்தால் பேசி முடித்து ஒப்பந்தங்களில் இணைத்திடுவதும், மேற்கண்ட ஒப்பந்த காலங்கள் இல்லாத இடைப்பட்ட நேரத்தில் அவசியமேற்பட்டால் தொழிற்சங்கங்களுக்கு 9A Notice கொடுத்து பேசுவதும் இதுவரை இருந்து வந்துள்ள தொழில் நல்லுறவு பேணும் முறையாகும்.

எனவே, மேற்கண்ட (Per) FB TANGEDCO No. 4, Dt. 05.03.2024ஐ தற்காலிகமாக நிறுத்தி வைத்து பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும்.

மேலும், Mobile App மூலம் கணக்கீடு செய்திட ஒவ்வொரு திட்டத்திலும் நிர்பந்திக்கக் கூடிய நிலை முன்னேறியிருப்பதாகவும், Mobile App மூலம் கணக்கீடு செய்யாதிருந்தால்

நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற வாய்மொழி உத்தரவும், Mobile App மூலம் களப்பணியாளர்கள் பணி செய்த விபரங்களை தெரிவிக்க வற்புறுத்துவதும் தொடர்கிறது என்பது, தொழிலாளர்கள் மத்தியில் மிகுந்த சலசலப்பை ஏற்படுத்தி வருகிறது.

சூரிய ஒளி மின்சக்தியை உற்பத்தி செய்ய வீடுதோறும் கொண்டு செல்ல மிகப் பெருமளவிற்கு ஆள்பற்றாக்குறை உள்ள நேரத்தில் தொழிலாளர்களை, பொறியாளர்களை நிர்பந்திப்பதும், அச்சுறுத்துவதும் சரியான செயல்பாடல்ல. **மின்கட்டணத்திலிருந்து விடுபட சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி செய்யுங்கள், 300 யூனிட் இலவசமாய் மின்சாரம் என்று பண்பலை வானொலிகள் பிரச்சாரம் மேற்கொள்கின்றன. இந்த நிலை மின்சார வாரியத்தின் நிலையை கேள்விக்குறியாக்கிவிடும் அபாயம் உள்ளது.**

அரசாணை 6 மற்றும் 7 கடந்த 24.01.2024ல் வெளியிடப்பட்டதை ரத்து செய்திட வேண்டும் என்கிற எங்களது வேண்டுகோளிலும், கோரிக்கையிலும் எவ்வித மாற்றமுமில்லை, கூடுதலாக 12.02.2024ல் கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தத்தையும் ரத்து செய்திட கோரி வருவதுடன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். 3663/2024 நிலுவையில் உள்ளது என்பதை குறிப்பிட விரும்புகிறோம்.

எனவே, 12.02.2024 முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள Mobile App பயன்படுத்த பணிக்கும் உத்தரவுகளையும், Abolition, Redeployment, Post discontinue என்ற பெயர்களில் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகளையும், 12.02.2024 முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு பின்னர் வெளியாகியுள்ள (Per) FB TANGEDCO No. 4, Dt. 05.03.2024 உத்தரவையும், சூரியஒளி (Solar) மின்சக்தி உற்பத்திக்கு நுகர்வோரிடத்தில் விளம்பரம் செய்து வீடுகளில் பொருத்த செய்யக் கூறும் வாய்மொழி உத்தரவுகள் யாவையும் உடனடியாக நிறுத்தி வைத்திட வேண்டுவதுடன் பணி நிலை மற்றும் பணிகளில் மாற்றம் செய்வது குறித்து 9A நோட்டீஸ் கொடுத்து பேசிட வேண்டும்.

எனவே, தலைவர் அவர்கள் மேற்கண்ட எங்களது கடிதத்தின் மீது தக்க கவனம் செலுத்தி அனைத்து உத்தரவுகளையும் நிறுத்தி வைத்து பேச்சுவார்த்தை நடத்தி தொழில் நல்லுறவை காத்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

நகல் :

1) **துணை மேலாண்மை இயக்குநர் (நிதி)**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

2) **மேலாண்மை இயக்குநர்**
தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்

3) **இயக்குநர் (பகிர்மானம்)**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

4) **இயக்குநர் (உற்பத்தி)**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

5) **இயக்குநர் (நிதி)**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் & தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்

7) **தலைமை பொறியாளர் (பணியமைப்பு)**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

8) **செயலாளர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

9) **தொழில் உறவு ஆலோசகர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

நாள் : 23.02.2024

பெறுநர்:

**செயலாளர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் - 28.02.2024 மாலை 05.15 மணிக்கு கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் - தெரிவித்தல் - தொடர்பாக.**

எதிர்வரும் 28.02.2024 புதன்கிழமை மாலை 05.15 மணிக்கு பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விளக்க கூட்டமும், ஆர்ப்பாட்டமும் அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயில்களில் நடத்திட உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

இணைப்பு : துண்டு பிரசுரம்

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

## மின்வாரிய பிரிப்பு - ஒப்பந்தமும் போராட்டமும்

**வணக்கம் தோழர்களே!**

1957ல் தொடங்கப்பட்ட மின்சார வாரியம் 2023ல் சுமார் 80,000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள், 95,000க்கு மேற்பட்ட ஓய்வூதியர்கள், சுமார் 56,000 பணிகாலியிடங்கள் 3 கோடிக்கு மேல் மேற்பட்ட நுகர்வோர்கள் என்ற நிலையில் உள்ள மின்தொழிலை பொதுத்துறையிலிருந்து கம்பெனி சட்டத்தின் கீழ் முழுமையான செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நாள்தான் 12.02.2024.

அரசாணை 100 TNEB (TNEB Ltd, TANGEDCO, TANTRANSCO)யை மூன்று கம்பெனிகளாக பிரித்து 2010 முதல் 2024 வரை செயல்பட்டு வந்துள்ளது. 2010ல் மூன்றாக பிரிப்பதற்கும் பல எதிர்ப்புக்கிடையேதான் பிரித்தார்கள். ஒப்பந்தத்திற்கான முன்வரைவு 2010 காலத்திலேயே மின்சார வாரியத்திற்கு அரசிடமிருந்து வந்து தொழிற்சங்கங்களின் கருத்து கேட்டு கிடப்பில் போட்டு இரண்டு சட்டப்பேரவை காலங்களுக்கிடையே அவ்வப்போது கருத்து கேட்டதும் நிராகரிப்பதுமாய் நின்ற நிலை 2023ல் விசுவரூபம் எடுத்து 2024 தாண்டவமாடி தற்காலிகமாக நிலை கொண்டிருக்கிறது. இந்த ஆட்டம் மேலும் தொடரலாம், தொடரும்...!!!

22.02.2018ல் கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தத்தை உடைக்கின்ற அளவில் 01.12.2015 முதல் 22.02.2018 வரை பணியேற்றவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கியதை பிடித்தம் செய்திட உத்திரவு. (இதை எதிர்த்து தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம்)

16.05.2023ல் கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தம் 01.12.2019 முதல் 16.05.2023 வரை பணியாளர்களுக்கு 6% ஊதிய உயர்வு மறுக்கப்பட்ட நிலை. (போராடியும், பேச்சுவார்த்தை நடத்தியும் இன்று வரை சுமார் 12,000 பேருக்கு ஊதிய உயர்வு வழங்கவில்லை.

66 ஆண்டுகால வாரிய செயல்பாட்டில் தொழிலாளர் பொறியாளர் என்ற பாகுபாடு இல்லாமல் உழைத்து உருவாக்கிய மின்சார வாரியத்தில் 16.05.2023 முத்தரப்பு ஒப்பந்தம் பொறியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் (Class I &II) 10 ஆண்டுக்கு ஒருமுறைதான் ஊதிய உயர்வு என உழைப்பவர்களிடத்தில் பிரிவினையை உருவாக்கியுள்ளது.

56,000 பணி காலியிடங்களை ஒழிக்கும் வண்ணமாக Abolition மற்றும் Post discontinue என்ற பெயரிலும் காலியிடங்களை ஒழித்தல் ஒருபுறம்!

ஆள் இல்லாத பதவிகளையும் Redeployment என்ற புதிய யுக்தியை அறிமுகப்படுத்தி பணியிடத்தில் ஆள் இல்லாமல் பணிச்சுமையை ஏற்றுதல் என்பது மறுபுறம்!

16.05.2023 ஒப்பந்தம் Right sizing of man power என்ற புதிய வடிவில் பதவி ஒழிப்புக்கு வித்திட முயன்று 3 மாத காலத்திற்குள் Work load பேசி முடிக்கப்படும் என்ற உத்திரவாதம் இன்று வரை காணாமல் போயுள்ளது.

ஊதிய உயர்வு காலத்திலேயே பேசி அளிக்கப்பட வேண்டிய Allowance-க்கு தனியாக கமிட்டி அமைத்து பேசி தருவோம் என்று தன்னிச்சைப் போக்கில் உத்திரவிட்டதோடு உறங்குகின்ற நிலை.

மின்சார வாரியத்தில் பணிபாதுகாப்பு, பதவி உயர்வு, புதிய பதவி அனுமதித்தல், ஊதிய உயர்வு, அகவிலைப்படி கடன் பெறுதல் என அனைத்திற்கும் அரசின் உத்தரவைப் பெற வேண்டுமென கொரோனா காலத்தில் போடப்பட்ட அரசாணையை பின்பற்றி வெளிவந்த BP2, போராட்டத்திற்கு பின்னர் கடன்கள் அளிப்பதற்கு அதிகாரப்பூர்வமாக விதிவிலக்கு, அகவிலைப்படி அளிக்க அவ்வப்போது அனுமதி பெறுதல் என்ற நிலையில் நம்மை உயிரோடு சாகடிக்கும் உத்தரவாக இன்றும் BP2 உயிரோடு!

45,000த்திற்கு மேற்பட்ட தினக்கூலி தொழிலாளர்கள்தான் மின்சார வாரியத்தை ஆலமரமாக உருவாக்க காரணமாக இருந்தார்கள் என்ற அடிப்படைத் தன்மை கூட முற்றிலும் மறந்துவிட்டு 10.08.2007க்கு பிறகு ஒப்பந்த தொழிலாளர்கள் நிரந்தரம் இல்லை என்ற முரண்பாட்டுடன் BP9ஐ ரத்து செய்தும் உச்சபட்சமாக 480 நாட்கள் வேலைபார்த்தவர்களை நிரந்தரம் செய்திட வேண்டுமென்ற சட்டத்தையும் புதைகுழியில் தள்ளியதால் 10,000க்கு மேற்பட்டோர் அனாதைகளாய் வீதியில் நிற்கும் நிலை.

சம்பளமும் இல்லாமல் தினசரி அலுவலகங்களையும், கழிவறையையும் சுத்தம் செய்ய கூட்டி பெருக்கி மற்றும் தண்ணீர் எடுத்து வைக்கும் 1000த்திற்கு மேற்பட்ட பகுதி நேரப் பணியாளர்கள் நிரந்தரத்தை எதிர்நோக்கி நிர்கதியாக நிற்கும் நிலை.

இந்நவீன காலத்தில் பொதுத் துறை நிறுவனமான மின்சார வாரியத்தில் கேங்மேன் என்ற புதுப்பெயரை உருவாக்கி 5,000 காலியிடத்தை நிரப்பிட 15,000 பேரை தேர்வு செய்து 10,000 பேரை பணியிலமர்த்தி அடிமைப்போல் பணி செய்ய வைக்கும் அவலத்தின் உச்சம். அதிலும் இந்த அடிமைப் பணிக்கு எங்களையும் எடுக்கவில்லையே என தேர்வு செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5,000 பேர் தொடர்ந்து போராடுவது மிச்சம். (Filed Assistant ஆக மாற்றிட கோரி போராடியும் பயனில்லை! வாரியம் எப்போது முடிக்கும்?!)

கொரோனா காலத்தில் பறிக்கப்பட்ட ஈட்டிய விடுப்பு காசாக்கும் முறை இன்று வரை அனுமதிக்கப்படவில்லை, பழைய ஓய்வூதியம் மீண்டும் வரும் என்பது கனவு காண்பதோடு நின்றுவிடுமோ தெரியவில்லை!

அடிப்படை பணியிடங்கள் Field Assistant, Technical Assistant, Junior Assistant, Typist, Assessor மற்றும் AD Men போன்ற பதவிகள் பூர்த்தி செய்யாமல் Outsourcing, "E" Tender முறை என புதுமையை புகுத்தி ஒப்பந்தத்திலும், ஓய்வு பெற்றவர்களையும் பணிக்கு அமர்த்தும் புதிய பாணி!

செய் அல்லது செத்து மடி என அச்சுறுத்தி பணி செய்ய வைப்பதில் தினசரி விபத்தில் மரணம் தொடர்கதையாகும் அவலம். உயிர் இழந்தோர், கால் இழந்தோர், கை இழந்தோர் குடும்பங்களின் கண்ணீரினை கண்டு கொள்ளாத கொடுமை.

பணி செய்து உயிரிழந்தோர் வாரிசுகளுக்கு வேலை தருவதில் இழுக்கடிப்பு, தகுதியில்லை வேலையில்லை என சுமார் 1000த்திற்கு மேற்பட்ட வாரிசு விண்ணப்பங்கள் நிலுவையில் இன்றும் தொடர் கதை.

Work Load ஒப்பந்தத்திற்கு உட்பட்ட பதவிகளை பந்தாடும் நிலையில் Non Work Load பகுதிகளில் (Thermal, Hydro, GCC, P&C மற்றும் Admin & Accounts நிலையோ கவலைக்கிடம்.

கணக்கீட்டு முறையை ஒழிக்கும் Smart Meter-யால் கணக்கீட்டுப் பிரிவும் கணக்குப் பிரிவும் காலாவதியாகும்!

வேறு என்ன மீதமிருக்கிறது மின்சார வாரியத்தில்! கடன் தானே! ரூ. 1,60,000/- கோடி!

13 ஆண்டுகளாக சொல்லொண்ணா துயரத்தில் பணி செய்தும் வளர்ச்சி பாதையில் தானே சென்றிருக்கிறது வாரியம்! வளர்ச்சிக்கு தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் தானே காரணம்!

அரசாணை 100க்கு ஒப்பந்தம் போடுவதற்கு முன் 24.01.2024ல் அவசரமாய் அரசாணை 6 மற்றும் 7 ஏன் வெளியிட வேண்டும்?

மின்சார வாரியம் விநியோகமும், உற்பத்தியும் ஒன்றாக இருப்பதில் இந்திய அளவில் முதல் ஐந்து இடங்களை பார்த்தால் வருவாய் ஈட்டுவதில் மூன்றாம் இடத்திலும், மின்விநியோகத்தில் நான்காம் இடத்திலும் உள்ளோம் என ஒப்புதல் வாக்கு மூலம் தந்த பின்னர் TANGEDCOவை பிரிப்பதின் அவசியம் என்ன? ஏன் வந்தது அரசாணை 6 மற்றும் 7 நாள்: 24.01.2024 தேதியிட்டு அரசாணை வெளியிட்டு இந்த நிதியாண்டிலேயே அமலுக்கு வரும் என்பதை சரிக்கட்டதான் 12.02.2024ல் ஒப்பந்தமா! என்ற கேள்விக்கு யார் விடை தருவார்?!

BP2ஐ ரத்து செய்ய முடியாது என்று எரிசக்தி துறை வெளியிட்ட உத்தரவை யார் ரத்து செய்வது?!

07.2.2024 தேதியிட்ட வாரியத்தின் கடிதத்திற்கு 15 நாட்கள் அவகாசம் கேட்டதை மறுத்ததின் காரணம் என்ன?

09.2.2024ல் உடனடியாக ஒப்பந்தம் 12.02.2024ல் என அறிவித்து அழைத்ததின் நோக்கம் என்ன?

09.2.2024ல் ஒப்பந்த முன்வரைவில் சேர்க்கை மற்றும் நீக்கம் குறித்து பேசியதில் தட்டச்சு பிழை மட்டும் தானே 12.02.2024 ஒப்பந்தத்தில் சரி செய்யப்பட்டுள்ளது!

01.10.2010 என்பதற்கு பதிலாக Settlement Date வரை - இதுபோன்ற சிறிய திருத்தங்கள் மற்றும் தட்டச்சு பிழைகளை சரி செய்தால் போதுமா?

5(10) & (12)ல் அரசாங்கம் அவ்வப்போது அறிவிக்கும் வாரிசு வேலை மருத்துவ செலவு திரும்ப பெறுதல், மருத்துவ காப்பீடு, கல்விக்கடன், வீடுகட்டும் கடன், சைக்கிள் படி, மருத்துவபடி, திருமண கடன், பண்டிகை முன் பணம், இதர கடன்கள் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான உத்தரவுகள் யாவும் அரசாங்கம் அறிவிப்பதை எந்தவித மாற்றமுமின்றி அப்படியே அடுத்து வரும் வாரிசு நிறுவனங்கள் (Successor Corporate Entity) இதுவரை வாரியம் செய்தது போல் அமல்படுத்தும் என்பதற்கு பதிலாக Prior Approval of Government have to be obtained after placing the issue before the respective board என்று குறிப்பிட்டதின் காரணம் என்ன? நீக்க சொன்னதை நீக்காததின் காரணம் என்ன? BP2 அடிப்படைத் தத்துவத்தை மறைமுகமாக அரங்கேற்றியது தானே உண்மை?!

5(20)ல் If the newly constitued corporate entity / entities fail to implement this agreement in any respect, the State Government shall take full responsibility என்பதோடு நிறுத்திடாமல் for enforcing such implementation by the entity concerned என்றால் என்ன உத்தரவாதம் இருக்கிறது! வற்புறுத்துவதோடு சரியா!!அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டாமா!!!

TNEB Ltd, TANGEDCO, TANTRANSCO அரசாங்க கம்பெனிகளெனில் GO 6 மற்றும் 7 பிரித்த கம்பெனிகள் அரசாங்க கம்பெனிகளாக இருக்குமா? மேலும் பலப் பல கம்பெனிகளாக பிரிக்கப்படமாட்டாது என என்ன நிச்சயம். GO 100க்கு ஒப்பந்தம் ஏற்படும் முன்னரே GO 6 மற்றும் 7 வந்ததின் மர்மம் என்ன என்பது புரியாத புதிரல்ல புரிந்தவர்கள் அறிந்து கொண்டே தெரிந்தே செய்ததுதான்! பலன் நமக்கில்லை என்பது மட்டும் நமக்குப் புரிந்ததும், அறிந்ததும், தெரிந்ததுமாகும்!

Grievence Cell ஒப்பந்தம் முன்வரைவில் நீக்கப்பட்டதின் காரணம் என்ன ID Provision உள்ளதால் என்பது சொல்லப்பட்ட காரணம் உண்மை தானா? அலுவலகர்களுக்கும், பொறியாளர்களுக்கும் ID Provision உள்ளதா? 44 தொழிலாளர் நல சட்டங்கள் 4 சட்ட தொகுப்புகளாக மாறிவிட்டால் நிலை என்ன? விடை யார் தருவார்?

- **நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்கு என்ன? (Workers participation in the management)**
- **ஓய்வூதியத்திற்கான நிதி குறித்த ஆதாரம் என்ன?**
- **அரசாணை 100ல் பிரிக்கப்பட்ட கம்பெனிகளின் வருவாய்க்கு உட்பட்டுதான் (Cash flow of the operation of the transferee) என்பது தானே உண்டு! Successor corporate entity வருமானம் குன்றினால் நிலை என்ன? கடனில் மூழ்கினால் நிலை என்னவோ?**
- **இதற்கு முன்னர் 60 ஆண்டு காலங்களில் போடப்பட்டுள்ள முத்தரப்பு ஒப்பந்தங்கள், உத்தரவுகள் மற்ற மாநில ஒப்பந்தங்களில் உள்ளதுபோல் மதிக்கப்படுமா?**
- **ஆந்திரா, கர்நாடகா, குஜராத், கேரளா மற்றும் பஞ்சாப் மாநில ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சாதகமான பல அம்சங்கள் இம்முன் வரைவில் இடம் பெறாதது ஏன்?**
- **முழுமையான பேச்சுவார்த்தை நடத்திட வாரியம் ஏன் முன்வரவில்லை?**
- **அரசாங்கத்திலிருந்து வந்த முன்வரைவை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் அதுதான் மின்சார சட்டம் சொல்கிறது மாற்றங்கள் கேட்டால் வராது அல்லது மேலும் காலதாமதமாகும் என்ற கருத்து எந்த அடிப்படையில் வாரியத்திலிருந்து முன் வைக்கப்பட்டது?**

- பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் விரைவாக ஒப்பந்தத்தை செய்திட வேண்டும் என்ற பரபரப்பிற்கு என்ன காரணம்?
- உரிமைகள் யாவும் இழந்து திக்கற்ற நிலையில் நிற்கிறோம் என்பதை உணராமல் ஒப்பந்தத்தில் கையொப்பமிட முடியுமா?
- உரிமைகளை பெறுவதற்கு பேச்சுவார்த்தை நடத்தி பெற்றதற்காக போடப்பட்டதுதான் இதுவரை உள்ள கடந்த கால ஒப்பந்தங்கள்.
- இன்று இருப்பவை யாவையும் இழப்பதற்கு ஒத்துக் கொண்டு போடுவதற்கு ஒப்பந்தமா என்ற நிலையில்தான் முழுமையான பேச்சுவார்த்தை நடத்தக் கோரி வாரியத்தை நாடினோம் பலனில்லை, நீதிமன்ற உதவியையும் (வழக்கு எண். 3663/2024) நாடினோம் பலனில்லை.
- மின்தொழிலையும், மின்சார தொழிலில் பணியாற்றும் அனைவரையும் பாதுகாக்கவும், உரிமைகளை பெறவும் இழந்தவைகளை மீட்கவும் ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை என்பதை நெஞ்சை நிமிர்த்தி துணிவாக சொல்லலாம். அச்சமில்லை.
- 2010 முதல் ஒப்பந்தம் போட சொல்லி வெற்றி பெற்றோம் என்ற கதாபாத்திரத்தை வெளிப்படுத்தி கதாநாயகர்களாக காட்சி தருபவர்கள் ஒரு பக்கம்!
- எங்களால்தான் முடிந்தது, எங்களால் மட்டுமே முடிந்தது என்று அனைவருக்கும் பொறிதட்டினாற்போல் மகிழ்வை வெளிப்படுத்தி புளங்காகிதம் அடைந்திருக்கும் புனிதர்கள் ஒரு பக்கம்.
- பாம்பு கடித்துவிட்டது என்றும் சொல்ல முடியாது! எதிர்காலத்தில் கடிக்காது என்றும் சொல்ல முடியாது பாம்பு கடித்தால் மாத்திரை சாப்பிடலாம் என கூறி பட்டை நாமத்தை சப்பை கட்டு கட்டி காரியக்கார பூனை குட்டி வெளியே வந்திருக்கும் புதிய படலம் ஒரு பக்கம்!
- எப்போது எப்போது என காத்திருந்தோர் மகிழ்வோடு ஏற்றுக் கொண்டுள்ளதும் ஒரு பக்கம்!
- எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒப்பந்தத்தில் கையெழுத்தை அவர்கள் ஏன் போட்டார்கள் இவர்கள் ஏன் போடவில்லை, இவர்கள் ஏன் போடவில்லை அவர்கள் ஏன் போட்டார்கள் போட்டதின் மர்மம் என்ன? போடாததின் மர்மம் என்ன? என அறியத் துடிக்கும் ஆர்வலர்கள் ஒரு பக்கம்!

விடை காண விரும்புவோர்களுக்கும், வினாத் தொடுக்க தேடி கொண்டிருப்பவர்களுக்கும், விளம்பரங்கள் கண்டு வியப்படைந்துள்ளவர்களுக்கும் மற்றும் விதி செய்த சதியோ என்று அன்றாட பணிகளை ஆராவாரமின்றி செய்திடுவோருக்கும் அறியத் தந்திருக்கும் செய்திகளுடன் ஆரம்பகட்ட போராட்டமாக **அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயில்களிலும் ஆர்ப்பாட்டத்தில் சங்கமிப்போம்!**



## நான்மணிக்கடிகை பாடல். 21 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### பெற்றான் அதிர்ப்பின் பிணையன்னாள்!

***பெற்றான் அதிர்ப்பிற் பிணையன்னாள் தானதிர்க்கும்***
***கற்றான் அதிர்ப்பின் பொருளதிர்க்கும் - பற்றிய***
***மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்ப்பின்***
***பாடல் அதிர்ந்து விடும்.***

**கருத்துரை**

கணவன் தன் ஒழுகலாற்றில் கலக்கம் அடைவானாகில் அவன் மனைவியும் தன் கடமைகளைச் செய்வதில் கலக்கம் அடைவாள்!

கற்றறிந்த புலவன் தன் அறிவில் தெளிவுன்றிக் கருத்தில் கலக்கமுற்றால், அவன் கற்ற கல்வியும் கலக்கமுறும்!

குடிமககள் தம் நன்னெறி நீங்கி நிலை கலங்குவார்களானால் அரசனது ஆட்சியும் ஆட்டம் காணும்!

அதுபோல், யாழின் நரம்புக் கட்டுக்குள் தம் நிலை குலைந்தால், யாழிலிருந்து பிறக்கும் இசையும் தெளிவின்றிக் கலக்கமுறும்!

**அருஞ்சொற்பொருள்:**

பெற்றான் = கணவன்; அதிர்ப்பின் = ஒழுக்கத்திற்கு கலங்குவானாயின்; பிணை அன்னாள் = பெண் மான் போலும் மருண்ட பார்வையுடைய அவன் மனைவியும்; அதிர்க்கும் = தன் கடமையில் கலங்குவாள்; கற்றான் அதிர்ப்பின் = புலவன் அறிவு கலங்கினால்; பொருள் அதிர்க்கும் = அவர் கற்ற கருத்துகளும் நிலை கலங்கும்; பற்றிய = தான் கைப்பற்றிய; மண் = நாட்டிலுள்ள குடிமக்கள்; அதிர்ப்பின் = நிலை கலங்குவாரானால்; மன்னவன் = அரசனது; கோல் அதிர்க்கும் = ஆட்சியும் கலங்கும்; பண் அதிர்ப்பின் - யாழின் நரம்புக் கட்டுகள் குலைந்துவிட்டால்; பாடல் அதிர்ந்துவிடும் = பிறக்கும் இசைப்பாடல்களும் கலங்கிப் போகும்.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**: 9841446621 : 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# பணிப் பதிவேடுகளில் விடுப்பு சம்மந்தமான பதிவேற்றம் - உத்தரவு

Administrative Branch,
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai,
Chennai - 02.

**Letter No. 000438/G.35/G.351/2024-1, Dated : 29.02.2024**

From

**S. ESWARI,** B.Com., M.A.
Senior Personnel Officer / Labour

To

1) All Chief Engineers of TANGEDCO & TANTRANSCO
2) The Chief Financial Controller / General
3) The Chief Internal Audit Officer
4) All Superintending Engineers of TANGEDCO & TRANSCO.
5) The Secretary
6) The Senior Personnel Officer / Recruitment
7) The Senior Personnel Officer/Inspection

Sir/Madam,

Sub:- TANGEDCO / TANTRANSCO - HCM Module - Service Book entries and Employees leave particulars (EL, UEL on private affairs, ML) in ERP - To be updated - Further instruction issued - Regarding.

Ref:- 1) CE/IT & RAPDRP'S Letter No. CE/IT/SE/IT-2/EE/ERP/AEE/ERP/F.HR/D.150/2022, dated 11.02.2022.
2) CE/IT & RAPDRP'S Letter No. CE/IT/SE/IT-2, EE/ERP/AEE/ERP/F.ERP/D. 1033/2022, dated : 15.11.2022.
3) This office Letter No. 000438/G.35/G.351/2024-1, dated : 15.02.2024.

****

It has already been instructed by the Chief Engineers / Information Technology vide references 1st & 2nd cited to enter all the details of employees in ERP and the Chief Engineer/Personnel also instructed to upload the requisite details in ERP vide letter dated 15.02.2024. Bit the above particulars have not been updated by many circles/stations to till date and some circles/stations have stated that the reasons for delay to process the above work is due to insufficient Data Entry Operators.

2) The Joint Managing Director/TANGEDCO has reviewed the progress and further instructed to explore the possibility of engaging Data Entry Operators in order to speed up the work.

3) Therefore, all the officers concerned are instructed to upload the above data in ERP immediately. If Data Entry Operators are not availble to proceed the above work, engagement of Data Entry Operators on temporary basis (through outsourcing) may be done to complete the above work on or before 15.03.2024 itself.

4. The entries made by data entry operator shall be verified by Assistant (Adm.) well checked by Adm. Supervisor and super checked by the Senior Administrative Officer/Administrative Officer/Assistant Administrative Officer and a certificate should be signed by Assistant, Adm. Supervisor and Assistant Adm. Officer/Administrative Officer/Senior Administrative Officer stating that all the data entries are found correct.

5) Further, instructed to theconcern officials to furnish the daily progress report (Annexure enclosed) to this office before 4.00 P.M and the consolidated daily progress report will be submitte to the JMD/TANGEDCO/ If report not received, it will be viewed seriously action will be taken against the Senior Administrative Officer, Administrative Officer and the Assistant Adminstrative Officer of the concerned circle/station.

Encl: Annexure

Yours faithfully,
(Sd/*** 29.02.2024)
**S. ESWARI** Senior Personnel Officer/Labour

# பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்கள்!

டாக்டர் கற்பகாம்பாள் சாய்ராம்

நன்றி: முதுமை எனும் பூங்காற்று மாத இதழ்



நடுத்தர வயதில் வரவேண்டிய எல்லாப் புற்றுநோய்களும் பெண்களுக்கு வரும். அதில் அதிகமாகக் காணப்படுவது, மார்பகப் புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயாகும்

**மார்பகப் புற்றுநோய்**

இந்தியப் பெண்களை அதிகம் தாக்கும் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய். ஒவ்வோர் ஆண்டும் 87 ஆயிரம் பெண்கள் இந்த நோயால் பரிதாபமாக உயிரிழக்கிறார்கள். பெண்களில் 28 பேரில் ஒருவருக்கு வாழ்நாளில் இந்தப் புற்றுநோய் தாக்கும் அபாயம் உள்ளது. இளம் வயதினர் முதல் வயதானவர்கள் வரை பெண்களில் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். எனினும் 45 முதல் 64 வயதுக்குள் இருப்போருக்கு இது அதிகம் வருகிறது. ஒருவருடைய குடும்பத்தில் யாருக்காவது இந்நோய் வந்திருந்தால், குடும்பத்தினருக்கும் இந்நோய் வருவதற்கு 5 முதல் 10 சதவிகித அபாயம் உண்டு. 'எங்கள் பரம்பரையில் யாருக்கும் இல்லை. அதனால் எனக்கு வராது' என்று பலர் நினைப்பதுண்டு. ஆனால், பரம்பரைக் காரணம் அல்லாமலும் வரலாம்.

பெண்களுக்குக் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு அடுத்ததாக மார்பகப் புற்றுநோய் வர வாய்ப்பு அதிகம். ஐம்பது வயதைக் கடந்த பெண்களுக்கு மார்புப் புற்றுநோய் வர வாய்ப்பு அதிகம். ஆண்களுக்கும் மார்பகப் புற்றுநோய் வரக்கூடும். ஆனால், இது சற்று அரிது, ஒரு மார்பகத்தில் புற்றுநோய் ஏற்பட்டிருந்தால், அடுத்த மார்பகத்திலும் புற்றுநோய் வர வாய்ப்புண்டு. ரத்த உறவினர்களுக்கு இப்புற்றுநோய் இருப்பின், அக்குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும் மார்பகப் புற்றுநோய் வர 2-3 மடங்கு வாய்ப்பு அதிகமாகும்.

அறிகுறிகள்

மார்பகத்தில் கட்டி வந்தால் ஆரம்பக்கட்டத்தில் இதில் வலி இருக்காது. பிறகு அரிப்பு, வலி ஏற்படும். மார்பகங்களில் வீக்கம், சிவப்பாக இருத்தல், மார்பகத்தில் குழி, தசை தடிமனாதல், காம்பைச் சுற்றி தோல் உரிதல், காம்பில் பாலைத் தவிர பச்சை நிறத்திலோ அல்லது மஞ்சள் நிறத்திலோ நீர் வடிதல் ஆகியவை ஏற்படும்.

**மார்பகப் புற்றுநோய் வர வாய்ப்பு அதிகம் உள்ளவர்கள்**

- ★ நெருங்கிய உறவினர்களுக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது.
- ★ இளம் வயதிலேயே பூப்பு அடைந்தவர்கள்.
- ★ காலம் தாழ்த்தி இறுதி மாதவிடாய் அடைந்தவர்கள்.
- ★ குழந்தைப் பேறு இல்லாதவர்கள்.
- ★ முதல் குழந்தையை 40 வயதிற்கு மேல் பெற்றவர்கள்.
- ★ இறுதி மாதவிடாய் அடைந்த பின்பு ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் எடுத்துக் கொள்பவர்கள்.
- ★ அதிக எடை உள்ளவர்களுக்கும், மது அதிகம் அருந்துபவர்களுக்கும் மார்பகப் புற்றுநே3ாய் வருவதற்கு ஓரளவிற்கு வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

**பரிசோதனைகள்**

முதலில் மேமோகிராம் பரிசோதனை செய்வார்கள். எக்ஸ்ரே மாதிரியான ஒரு பரிசோதனை இது. எக்ஸ் கதிர்களின்றி எம்.ஆர்.ஐ. மேமோகிராம் கூடச் செய்து கொள்ளலாம். பின்பு பயாப்சி பரிசோதனையில் உறுதி செய்வார்கள்.

★ 45 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு அதிகமாக மார்பகப் புற்றுநோய் பாதிக்கிறது. அதனால் மேமோகிராம் பரிசோதனையை இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது செய்து கொள்வது நல்லது. குடும்பத்தில் யாருக்காவது இந்த நோய் வந்திருந்தால், வருடத்திற்கு ஒருமுறை மேமோகிராம் பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டும்.

★ இப்புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், குணப்படுத்துவது சுலபம். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பரிசோதனை செய்து கொண்டால், அடுத்த மார்பகத்திற்குப் பரவாமல் தடுக்க முடியும்.

★ மார்பகப் புற்றுநோய் அறிய, செலவில்லாத சுலபமான வழி, சுய பரிசோதனை, கண்ணாடி முன்பு நின்று மார்பகங்களை அழுத்திப் பார்த்தால் ஏதாவது வித்தியாசம் இருப்பதை உணர முடியும். சந்தேகமாக இருப்பின் மேமோகிராம் செய்து கொள்ளலாம். மாதவிலக்கான 7-வது நாளுக்குப் பிறகு மாதம் ஒருமுறை இதைச் செய்ய வேண்டும். 35 வயதைத் தாண்டிய பெண்கள் அவசியம் செய்து கொள்ள வேண்டிய பயிற்சி இது.

★ எல்லாக் கட்டியும் புற்றுநோயாக இருப்பதில்லை. சாதரணக் கட்டிகள் கூட வரலாம். அவற்றை ஃபைப்ரோ அடினோமோ (Fibroadenoma) என்பார்கள்.

**காரணங்கள்**

மரபணு (Genes - BRCA - 1&BRCA -2) காரணமாக அம்மாவிடமிருந்து மகளுக்கு மற்றும் மகளிடமிருந்து பேத்திக்குங்கும் வரலாம்.

★ வாழ்க்கைமுறை மாற்றம், சுற்றுச்சூழல் மாசுபாடு, மன அழுத்தம் ஒரு காரணமாக இருக்கலாம்.

★ மிக இளம் வயதில் பூப்பெய்துவது, மிகத் தாமதமான மெனோபாஸ் ஆகிய இரண்டுமே மார்பகப் புற்றுநோய்க்கான பிரதான காரணங்கள்.

★ தாமதமாகக் குழந்தை பெற்றுக் கொள்பவர்கள், குழந்தைப்பேறு இல்லாதவர்கள் ஆகியோருக்கும் அபாயம் அதிகம்.

★ உடல் எடை கூடினால் அபாயம். அதிகப்படியான கொழுப்பு, ஈஸ்ட்ரோஜனாகவே மாறும். அது ஆபத்தின் அறிகுறி.

★ மெனோபாஸுக்குப் பிறகு பெண்மையைத் தக்க வைத்துக் கொள்ள எடுத்துக் கொள்ளும் ஹார்மோன் ரீப்ளேஸ்மென்ட் தெரபியும்கூட மார்பகப் புற்றுநோய் வருவதற்குக் காரணமாகலாம்.

★ வைட்டமின் டி குறைவாக இருப்பவர்களுக்கு, இந்த ஆபத்து அதிகம்.

★ உணவு, தண்ணீரில் ரசாயனம் கலந்திருப்பதும், ரசாயனங்கள் கலந்த அழகு சாதனப் பொருட்கள் உபயோகிப்பதும் காரணமாகலாம்.

★ குழந்தைக்கு ஒரு வருடத்திற்காவது தாய்ப்பால் புகட்டுபவர்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்கு வாய்ப்புக் குறைவு.

**சிகிச்சை முறை**

சுய மார்புப் பரிசோதனை செய்து கொள்வது (முக்கியமாகக் குடும்பத்தில் யாருக்காவது மார்புப் புற்றுநோய் இருப்பின்), மெமோகிராம், அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், திசுக்களை எடுத்துப் பரிசோதனை செய்வதன் மூலம் இந்நோயை அறியலாம். மேமோகிராம் செய்வதற்கு வயது வரம்பு ஏதுமில்லை.

சிகிச்சை முறை, புற்றுநோயின் தன்மை மற்றும் மொத்தமான உடல்நிலையைப் பொறுத்ததே. அறுவை சிகிச்சைக்குப் பின்பு கதிர்வீச்சு சிகிச்சை தேவைப்படும். புற்றுநோய் மார்பகத்தைத் தாண்டி உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவியிருந்தால் மருத்துவச் சிகிச்சை தேவைப்படும். இச்சிகிச்சையில் சில பக்கவிளைவுகளும் உண்டு. வாந்தி, பசிக் குறைவு, உடல் களைப்பு, முடி கொட்டுதல் போன்றவை.

பொதுவாக மார்பகப் புற்றுநோய்க்கு மூன்றுவிதச் சிகிச்சை முறைகள் உண்டு. கீமோதெரபியில் நரம்புகள் வழியாக மருந்துகளைச் செலுத்திப் புற்றுநோய் செல்களை அழிக்கலாம். புறறுநோய் உள்ள மார்பகத்தில் கதிர்வீச்சு செலுத்தி, புற்றுநோய் செல்களை அழிக்கும் கதிர் இயக்கச் சிகிச்சை தரலாம். இதுதவிர, அறுவை சிகிச்சை மூலம் புற்றுநோய் பாதித்துள்ள மார்பகத்தையும் நெறிக்கட்டிகளையும் அகற்றலாம். ஹார்மோன் மாற்றுச் கிசிச்சை, இம்யூனோ தெரபி போன்ற சிகிக்சைகளும் உள்ளன.

புற்றுநோய் தாக்கிய செல்களின் விகிதத்தைப் பொறுத்து இந்த நோயை நான்கு நிலைகளாகப் பிரிக்கிறார்கள். ஒவ்வொரு நிலைக்கும் ஏற்றபடிச் சிகிச்சைகள் வேறுபடும். ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், மார்பகங்களை அகற்ற வேண்டிய தேவை இருக்காது. பூரணகுணம் பெறவும் முடியும்.

இதில் தொடர் சிகிச்சையும் கண்காணிப்புமே முக்கியமானது. ஆறு மாதத்திற்கு ஒருமுறை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். புற்றுநோய் பாதிக்காத மார்பகத்தையும், பிற உறுப்புகளையும் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் அதிகமாக இருந்தபோது, பாப்ஸ்மியர் பரிசோதனையின் முக்கியத்துவத்தைச் சொல்லி விழிப்புணர்வுடன் ஊட்டியதால் இப்போது அதன் தீவிரம் குறைந்துள்ளது. அதுபோல மார்பகப் புற்றுநோய்க்கான மேமோகிராம் பரிசோதனையை, 45 வயதுக்கு மேலுள்ள பெண்கள் அனைவரும் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை செய்து கொள்ள வேண்டும். இதைச் செய்தால், ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை பெற்று நலமாக வாழலாம்.

**கவலை தரும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்**

கர்ப்பப்பையின் கழுத்துப் பகுதிதான் கர்ப்பப்பபை வாய் (Cervix) என்று அழைக்கப்படுகிறது. இங்கு ஹெச்.பி.வி. எனப்படும் ஹ்யூமன் பாபிலோமா வைரஸ் தொற்றுவதால் புற்றுநோய் ஏற்படுகிறது. முறையான பரிசோதனைகள் செய்து கொள்வது, தடுப்பூசி போன்றவற்றின் மூலம் இந்த வைரஸ் தொற்றைத் தடுத்துவிடலாம். என்றாலும் இதுகுறித்துப் பெண்களுக்கு விழிப்புணர்வு இல்லாததால், இந்த நோயின் தாககுதல் இன்னும் அதிகமாகவே உள்ளது. இந்தியாவில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் அவதிப்படும் பெண்களில் மூன்றில் ஒருவர் பரிதாபமாக உயிரிழக்கிறார்கள். 45 முதல் 60 வயதினரிடையே இது அதிகமாகக் காணப்படுகிறது.

பிறப்புறுப்பில் தோன்றும் மரு, மிகச் சிறுவயதிலேயே திருமணம் செய்து கொள்வது, அதிக குழந்தைகள் பெறுவது, பிறப்புறுப்புப் பகுதியைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாதது ஆகியவையே இதற்குக் காரணம்.

இதன் முக்கிய அறிகுறிகள்... பிறப்புறுப்பில் ஏற்படும் ரத்தக்கசிவு, நீர்க்கசிவு, அடிவயிற்றில் வலி மற்றும் அடி முதுகில் வலி போன்றவை.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிய பாப்ஸ்மியர் பரிசோதனை உதவுகிறது. 30 வயதைத் தாண்டிய பெண்கள் அனைவரும் இப்பரிசோதனையை ஆண்டிற்கு ஒருமுறை செய்வது அவசியம். இதன் மூலம் கர்ப்பப்பை வாயில் கிருமித் தொற்று, புற்றுநோய் அல்லது புற்றுநோயாக மாறக்கூடிய நோய்கள் போன்றவற்றைக் கண்டறிய முடியும்.

## விருதுநகர் மின்வட்டம்

கடந்த 28.02.2024 அன்று G.O. 100க்கான முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடாதது சம்மந்தமாகவும் அதில் உள்ள ஷரத்துகளில் மாற்றம் செய்ய நாம் அளித்த கடிதம் அரசாணை எண். 06 மற்றும் 7ஐ திரும்ப பெற வலியுறுத்தியும் மற்றுள்ள கோரிக்கைகளு்காக மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம் விருதுகள் மின் பகிர்மான வட்டத்தில் வட்டக் கிளை தலைவர் S. இளங்கோவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் 125 பேர் கலந்து கொண்டனர். மாநிலத் தலைவர் கோரிக்கைகள் சம்மந்தமாக சிறப்புரையாற்றினார். வட்ட செயலாளர், வட்ட பொருளாளர், வட்ட செயல் தலைவர், வட்ட அமைப்பு செயலாளர் உள்ளிட்ட கோட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட இணைச் செயலாளர் திரு. G. மாரியப்பன் நன்றி கூறினார்.

வாரிய ஆணை எண் 04 நாள்: 05.03.2024ஐ ரத்து செய்யக் கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டம் விருதுநகர் மின்பகிர்மான வட்டத்தில் இராஜபாளையம் கோட்டம் கோட்ட அலுவலகம், ஸ்ரீ வில்லிபுத்தூர் கோட்டம் வத்திராயிருப்பு, சிவகாசி கோட்டம் கோட்ட அலுவலக வளாகம், விருதுநகர் கோட்டம் உபமின் நிலைய வளாகம், அருப்புக்கோட்டை கோட்டம் காரியாபட்டி உபகோட்டம், சிவகாசி கோட்டம் திருத்தங்கல் உபகோட்டம், சாத்தூர் உபமின் நிலையம் ஆகிய இடங்களில் காலையிலும், மற்றும் மதிய உணவு இடைவேளையில் விருதுநகர் மத்திய அலுவலகத்திலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## திருச்சி பெருநகர் வட்டம்

திருச்சி பெருநகர் வட்டத்தில் BP 4ஐ ரத்து செய்யக் கோரி 08.03.2024 அன்று தலைமை பொறியாளர், திருச்சி தென்னூர் அலுவலக வாயிலில் மாலை 05:20 மணிக்கு நடைபெற்ற கண்ட ஆர்ப்பாட்டம் கிழக்கு கோட்டத் தலைவர் தோழர் கு. செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. திட்ட செயலாளர் தோழர் இரா.சிவச்செல்வன் சிறப்புரை ஆற்றினார். மேலும் கோட்ட செயலாளர்கள் அர்சுனன், M.S. மணி, கருப்பையா, தனராஜ், அன்பழகன் உரையாற்றினர். திரு. M. செந்தில்குமார் பொருளாளர் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

தொழிலாளர் வர்க்கம் அரசையும் மின்சார வாரியத்தையும் எதிர்த்து எத்தனையோ போராட்டம் நடத்தியது. அதில் விவசாயிகள் டெல்லியில் நடத்திய போராட்டம் மத்திய அரசை பணிய வைத்தது. மேலும் இந்தியாவில் என்ன நடக்கிறது என்று எல்லோரையும் சிந்திக்க வைத்தது. இறந்தவர்கள் 700 விவசாயிகள்.

07.03.2024 அன்று முடிவெடுத்து அனைத்து கிளைகளும் 08.03.2024ல் ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் என்ற செய்தி வியப்பாகி நம்மால் முடியுமா இது சாத்தியமா என்று கேள்வி எழுந்தபோது 24 மணி நேரத்திற்குள் போரட்டமா இந்திய வரலாற்றில் அதுவும் மின்சாரவாரியத்தில் சாத்தியமா என்று யோசனை செய்யும் ஒரு சில கண நேரத்தில் இணைய கூட்டம் நடைபெற்று முடிந்துவிட்டது.

தோழர்களே மின்சார வாரியத்திற்கு பேராபத்து மின்சார வாரியத்தை காத்திட அனைவரும் களமிறங்கி போராட வேண்டும். ஒப்பந்தத்தில் கையொப்பம் இடவில்லை.

மின்சார வாரியத்தில் 13 ஆண்டுகால கனவு சட்டப் போராட்டம் நிறைவு பெற்றது. என இதனை கொண்டாடுவோம் அனைவரும் இனிப்பு கொடுத்துகொண்டாடுங்கள் என்றும்

சொல்லகூடிய சங்கங்கள் ஒருபுறம், கையொப்பம் இட்டிருக்கும் சங்கங்கள் ஒருபுறம். BP No. 4 5.03.2024ஐ வெளியிட்டு மின்சார வாரியம் குழு அமைத்ததின் பரிந்துரையை பெற்றுக்கொண்டு நிர்வாகத்தின் உண்மையான முகத்தை காண்பிக்க ஆரம்பித்தது, அதன் முதல் கட்டம் ஆட்குறைப்பு அதை பொறியாளரில் இருந்து தொடங்கிவிட்டது நிர்வாகம்.

போராட வேண்டியவர்கள் நமக்கு ஏன் வம்பு என்று அமைதியாக இருக்கக் கூடாது. அதே ஆட்குறைப்பு நடவடிக்கை பிரிவு அலுவலகங்களுக்கு நாளை வந்தால், வராது என்று என்ன உத்திரவாதம், யாரை நம்புவது எல்லாமே பச்சை துரோகமென்பது வெட்ட வெளிச்சமாக தெரிந்துவிட்டது.

கணக்கீட்டாளர்களை Phone App கொண்டு கணக்கீடு செய்ய கட்டாயப்படுத்துவதில் என்ன நியாயம் உள்ளது. நகர்புரத்தில் எடுத்துவிடலாம் கிராமபுரத்தில் உயரமாக மீட்டர் பொருத்தப்பட்டுள்ள இடங்களில் எப்படி எடுப்பது இதனை நிர்வாகம் சிந்திக்க வேண்டாமா? Handset வாரியம்தானே கொடுத்தது தற்போது Phone Appல் கணக்கீடு செய்ய கட்டாயப்படுத்தினால் Cell Phone வாரியம்தான் தரவேண்டும்.


அடுத்த பேராபத்து Smart Meter பொருத்த வேண்டும் என்பது, அதிலும் Phone App கொண்டு ரீடிங் எடுக்க நிர்பந்தித்தால் Smart Meter பொருத்த அனுமதிக்கமாட்டோம். அதையும் மீறினால் போராட தயங்கக் கூடாது. இனி வாழ்நாள் முழுவதும் போராட வேண்டும். தொழிலாளர்களையும் மின்சாரவாரியத்தையும் காப்பதே நமது நோக்கம். இனி இழப்பதற்கு ஒன்றும் இல்லை உயிரை தவிர.

இறுதி மூச்சு உள்ளவரை தொழிலாளர் வர்க்க உணர்வோடு மின்சார வாரிய ஊழியர்களுக்காக போரடுவதே நமது நோக்கம் மற்றும் கனவு.

யார் என்ன சொன்னாலும் சரி
யார் என்ன செய்தாலும் சரி

மிகச்சிறந்த மிகச் சிறந்த சங்கமான எம்ப்ளாயீஸ் பெடரேஷனில் செயல்படுவதே பெருமையாக நினைக்கின்றோம்.

**மின்சார வாரியத்தில் பணியாற்றும்**
**மகளிர் அனைவருக்கும் இனிய மகளிர் தின நல்வாழ்த்துகள்**




**மார்ச் 8**
**2024**

**- TNEB எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் மகளிரணி**

# சேலம் மின்வட்டம்

**28**.2.2024 ஆர்ப்பாட்டம் சேலம் வட்டகிளையில் மாநில செயல் தலைவர் தோழர். ஆர். ஜெயராமன் அவர்களது தலைமையில் நடைபெற்றது, இந்த ஆர்பாட்டத்தில் சேலம் வட்டகிளையின் ஆத்தூர் கோட்டம், வாழப்பாடிகோட்டம், கிழக்கு கோட்டம், மேற்கு கோட்டம், தெற்கு கோட்டம், மற்றும் நகரகோட்டத்தின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் பெரும்பான்மையாக பங்கேற்றனர்.முன்னதாக தலைமையில் இருந்து அனுப்பபட்ட நான்கு பக்க நோட்டீஸ் சேலம் மின்திட்ட பிரிவு அலுவலகங்களில் பணியாற்றும் பணியாளர்களின் கைகளுக்கு கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது நல்ல பலனை அளித்தது என்றே கூறவேண்டும்.

ஆர்ப்பாட்ட கோஷங்களை வட்ட இனைசெயலாளர் தோழர்.பாஸ்கரன் அவர்கள் எழுப்பிட அனைவரும் சேர்ந்து ஆர்ப்பாட்ட கோஷமிடபட்டது, அதை தொடர்ந்து, மாநில இணைச் செயலாரும், சேலம் வட்டகிளையின் செயலாருமான தோழர். ஆர். சேகர் அவர்கள் சிறப்புரை ஆற்றி இந்த ஆர்ப்பாட்டத்திற்க்கான காரண காரியங்களை விளக்கி எழுச்சி உரையாற்றினார்.

தலைமையில் இருந்து அனுப்பிய நான்கு பக்க நோட்டீஸ்ல் உள்ள செய்திகளை தொழிலாளர்கள் விரைவாகவும், தெளிவாகவும், அறிந்து கொள்ளும் வகையில் மூன்றாக பிரித்து, 12.02.24ல் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடாததற்க்கான காரணங்களை விளக்கி வாட்சாப் மற்றும் முகநூல் பக்கங்களின் மூலம் அனைவருக்கும் சென்று சேர்ந்திடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது நல்ல வரவேற்ப்பினை பெற்றிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் சேலம் வட்ட கிளையின் நிர்வாகிகள், பொருளாளர். கோவிந்தராஜ் மற்றும் தோழர்கள், பாஸ்கரன், ராஜேந்திரன், கஜேந்திரன், விஸ்வலிங்கம், சந்தரஹாசன், பாரதி, மனோகர், செந்தில்குமார், சீனிவாசன் மகளிரணி தோழியர்கள் சிவராணி, ரோஜா மற்றும் பல தோழியர்கள் பங்கேற்றனர்.

மாநில செயல் தலைவரும் சேலம் வட்டகிளையின் தலைவருமான தோழர். ஆர். ஜெயராமன் அவர்கள் ஆர்ப்பாட்ட உரையாற்றி முத்தரப்பு ஒப்பந்தத்தில் எம்ப்ளாயிஸ் பெடரேசன் கையொப்பம் இடாததற்க்கான காரணங்களை தொழிலார்களிடையே விரிவாக எடுத்து கூறி ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்திட மீண்டும் ஆர்ப்பாட்ட கோஷமிட்டு சேலம் வட்டகிளையின் பொருளாளர் தோழர். ஆர். கோவிந்தராஜ் நன்றி கூறிட 28.02.2024 அன்றைய ஆர்ப்பாட்டம் சேலம் வட்டகிளையில் சிறப்பாக நடைபெற்றது.

ஆர். சேகர், செயலாளர், சேலம் வட்ட கிளை சேலம். 11.03.2024 TNEB எம்ப்ளாயிஸ் பெடரேசன்/சேலம் வட்டகிளையில் 08.03.2024 அன்று, மாநில செயல்தலைவர் தோழர் ஆர். ஜெயராமன் அவர்களது தலைமையில் மேற்பார்வை பொறியாளர் அவர்களது அலுவலக நுழைவாயிலில் ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், ஆத்தூர் கோட்டம், வாழப்பாடி கோட்டம், கிழக்கு கோட்டம், மேற்குகோட்டம், தெற்குகோட்டம், நகரகோட்டம் ஆகிய சேலம் மின் வட்டத்தின் அனைத்து பகுதியிலிருந்தும் தொழிலாளர்கள் தங்களுடைய பணிசுமைகளுக் கிடையிலும், தொழிற்சங்கம் எடுத்த முடிவுகளை செயல்படுத்திடும் வகையில் ஆர்பாட்டத்தில் பங்கேற்று ஆர்ப்பாட்ட கோஷங்களை எழுப்பியது குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது.

மாநில இணை செயலாளரும், சேலம் வட்டகிளையின் அமைப்பு செயலாளருமாகிய தோழர் எஸ். புகழேந்தி கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்ட கோஷமிட பங்கேற்றவர்கள் அனைவரும் உணர்வுடன் கோஷங்களை எழுப்பினர், மாநில இணை செயலாளரும் சேலம்வட்ட கிளையின் செயலாளருமான தோழர் ஆர். சேகர் ஆர்ப்பாட்ட கோரிக்கைகளை விளக்கி ஆர்ப்பாட்டத்தில் எழுச்சி உரைஆற்றினார்.

மாநில மகளிரணி இணைசெயலாளர் தோழியர். வி. சிவராணி, மற்றும் அமைப்பு செயலாளர், தோழர். எஸ். புகழேந்தி ஆகியோர் ஆர்ப்பாட்ட உரை நிகழ்த்தினர். இறுதியாக மாநில செயல் தலைவர் தோழர்.ஆர்.ஜெயராமன் தனது ஆர்ப்பாட்ட உரையில் வாரியத்தின் இன்றைய போக்கு, BP 4, 05.03.24, 12.02.24 முத்தரப்பு ஒப்பந்தம், கணக்கிட்டு பணியாளர்களின் பிரச்சனைகள், சோலார் எனர்ஜியால் வாரியத்திற்க்கு ஏற்படக்கூடிய எதிர்கால விசயங்கள் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார்.

தலைவர்களது உரைகள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் ஆர்ப்பாட்ட கோஷங்கள் எழுப்பிட நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## தருமபுரி மின்வட்டம்

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேசன் நடத்திய மின் வாரிய பிரிப்பு ஒப்பந்தமும் போராட்டமும் இன்று 28.02.2024 மாலை 5.20.மணி தருமபுரி மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு நடைப்பெற்ற ஆர்பாட்டத்தில் திட்ட தலைவர் A. அருள்நாதன் தலைமையில் நடைபெற்றது வரவேற்புரை திட்ட செயலாளர் கோகுல்தாஸ் முன்னிலை V.R. பாண்டியன், S. மாதேஸ், லோகநாதன் TA, ஆனந்தன், வாசுதேவன், மணி, ஜெயராமன் மற்றும் மகளிர் அணி, ஒப்பந்த தொழிலாளர்கள். சிறப்புரை UTUC மாவட்ட தலைவர் புகழேந்தி நன்றியுரை திட்ட பொருளாளர் அழகேசன் TNEB எம்ளாயிஸ் பெடரேசன் தருமபுரி திட்டம்.

TNEBEF தருமபுரி திட்டத்தில் BP 4ஐ ரத்து செய்ய கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்ற நிகழ்வில் திட்ட தலைவர் அருள்நாதன், திட்ட செயலாளர் கோகுல்தாஸ், திட்ட பொருளாளர் அழகேசன் மற்றும் மத்திய அலுவலக நிர்வாகிகள் வாசுதேவன், ஆனந்தன், லோகநாதன் TA, தங்கவேல், சகாதேவன் பாலக்காடு கோட்ட தலைவர் முருகன் மற்றும் மகளிர் அணி, ஒப்பந்த தொழிலாளர்கள், நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலை மின்வட்டம்

கடந்த 8.3.2024 அன்று அன்று மாலை ஐந்து 20 மணிக்கு BP 4ஐ திரும்ப பெற கோரி திருவண்ணாமலை மேற்பார்வை பொறியாளர் அலுவலக வளாக வாயில் முன்பு முன்பு திட்ட தலைவர் திரு ஏ. அருண் பிரசாத் தலைமையில் அவர்கள் தலைமையில் தலைமையில் திட்ட பொருளாளர் என் ஆறுமுகம் அண மேற்கு கோட்ட செயலாளர் ஆர். சரவணன் கிழக்கு கோட்ட செயலாளர் ஆர் கமலக்கண்ணன் அமைப்பு செயலாளர் பி. துரை வந்தவாசி கோட்ட செயலாளர் ஜி. சுப்பிரமணியன் ஆரணி கோட்ட செயலாளர் என். இளஞ்செழியன் தலைவர் ஞான முருகன் மற்றும் மகளிர் அணி மாவட்ட செயலாளர் சிவசங்கரி மற்றும் மகளிர் அணி மாநில இணை செயலாளர் எஸ். சரத்குமாரி உரைக்குப் பின்னர் மாநில செயலாளர் மற்றும் விட்ட செயலாளர் கே. பஞ்சமூர்த்தி கண்டன உரைக்கு பின்னர் என் பாஸ்கர் நன்றி உரை கூறினார்.

கடந்த 28.2.24 அன்று டேன்ஜெட்கோ மூன்று கம்பெனிகளாக பிரிப்பதை எதிர்த்து முத்தரப்பு ஒப்பந்தத்தை கண்டித்து கர்நாடகா ஆந்திரா கேரளா பஞ்சாப் குஜராத் மாநில அரசாங்கங்கள் வழங்கிய உத்தரவாதத்தை போல தமிழ்நாடு அரசும் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று திருவண்ணாமலை மேற்பார்வை பொறியாளர் அலுவலக அலுவலக வாயில் வாயில் முன்பு திட்டத் தலைவர் திரு H. அருள்பிரசாத் தலைமையில் தலைமையில் பொருளாளர் என். ஆறுமுகம் மற்றும் திருவண்ணாமலை மேற்கு கோட்ட செயலாளர் ஆர். சரவணன் கிழக்கு கோட்ட செயலாளர் கமலக்கண்ணன் மற்றும் வந்தவாசி கோட்ட செயலாளர் ஜி. சுப்பிரமணியன் சேத்துப்பட்டு கோட்ட செயலாளர் பி. துரை ஆரணி கோட்ட செயலாளர் என். இளஞ்செழியன் தலைவர் எஸ். ஞானமுருகன் மற்றும் மகளிர் அணி மாவட்ட செயலாளர் சிவசங்கரி மற்றும் மகளிர் அணி மாநில இணை செயலாளர் எஸ். சரத்குமாரி உரைக்குப் பின்னர் மாநில செயலாளர் மற்றும் திட்ட செயலாளர் கே. பஞ்சமூர்த்தி கண்டன உரைக்குப் பின்னர் சண்முகம் அவர்கள் நன்றியுரை கூறினார்கள்.

## காஞ்சிபுரம் மின்வட்டம்

தமிழக மின்வாரியத்தை பொதுத் துறையில் இருந்து அரசாணை 100 TNEBயை கொண்டு மூன்று கம்பெனிகளாய் பிரித்ததை எதிர்த்தும் நியாயமான கோரிக்கைகளை கேட்க மறுக்கும் / தமிழக அரசை கண்டித்தும் கோரிக்கைகளை வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டமானது TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சங்கத்தின் சார்பாக மாநில முழுவதும் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக காஞ்சிபுரம் ஒளி முகமது பேட்டையில் உள்ள தலைமை பொறியாளர் அலுவலகம் முன்பாக 28.02.2024 ஒப்பந்தத்தை கையொப்பமிடாமல் இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய கோரியும் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் காஞ்சி திட்டத்துடைய செயல் தலைவர் K. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது திட்டத் தலைவர் A. பெருமாள் அவர்கள் முன்னிலையில் மண்டல செயலாளர் M. ஜானகிராமன் சிறப்புரையாற்ற திட்டத்துடைய இணை செயலாளர் V. அண்ணாமலை வடக்கு கோட்ட செயலாளர் R. மூர்த்தி மற்றும் தொழிலாளர் தோழர்கள் ஒருங்கிணைந்து கோரிக்கை கோஷம் இட வடக்கு கோட்ட தலைவர் A. சங்கர் நன்றி உரை கூறினா.

## சென்னை வடக்கு மின்வட்டம்

100க்கும் மேற்பட்ட மின்வாரிய பொறியாளர் பதவிகளை ஒழிக்கும் BP 4ஐ ரத்து செய்திடவும், 12.02.2024 முத்தரப்பு ஒப்பந்ததை ரத்து செய்திவும், G.O. 6&7 ஐ ரத்து செய்திடவும், MOBILE APP பயன்படுத்தி கணக்கீட்டு பணிக்கு உத்தரவிட்டதை ரத்து செய்திடவும் வலியுறுத்தி 08.03.2024 (வெள்ளிக்கிழமை) மாலை சென்னை வடக்கு திட்டத்தின் சார்பாக கோரிக்கை விளக்க கூட்ட ஆர்பாட்டம் பொன்னேரி கோட்ட செயற்பொறியாளர் அலுவலக வாயிலில் நடைபெற்றது. விளக்க கூட்டத்திற்கு திரு. நஞ்சுண்டராவ், திட்ட ஆலோசகர் தலைமை தாங்கினார். திட்ட இணைச்செயலாளர் திரு. தியாகராஜன், பொன்னேரி கோட்ட பொறுப்பு செயலாளர் திரு. கிருபாகரன் மற்றும் திரு. நாராயணமூர்த்தி திட்ட செயலாளர் ஆகியோர் விளக்க உரை ஆற்றினர்.

இந்த விளக்க கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்து எழுச்சி உரை ஆற்றினார். திரு. ஜெய்கணேஷ், திட்ட பொருளாளர் அவர்கள் நன்றியுடன் கூட்டம் நிறைவு பெற்றது. சுமார் 120 பேர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தை பிரிப்பதற்கும், 12.02.2024 அன்று ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு பாதகமான அம்சங்களை மாற்றம் செய்திடவும் கடந்த 28.02.2024 (புதன்கிழமை) அன்று மாலை சென்னை வடக்கு திட்ட எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சார்பாக பெரம்பூர் கோட்ட செயற்பொறியாளர் அலுவலக வாயிலில் மின்வாரிய பிரிப்பு-ஒப்பந்தமும் போராட்டமும் விளக்க கூட்டம் ஆர்பாட்டம் நடைபெற்றது.

விளக்க ஆர்பாட்ட கூட்டத்திற்கு திட்ட தலைவர் திரு. குமார் அவர்கள் தலைமை தாங்கினார். திட்ட ஆலோசகர் திரு.நஞ்சுண்டராவ், மாநில இணைச்செயலாளர்கள் திருமதி. பானுமதி, ஸ்ரீமதி மற்றும் திட்ட செயலாளர் திரு. நாராயணமூர்த்தி ஆகியோர் விளக்கி பேசினர். திட்ட பொருளாளர் திரு. ஜெய்கணேஷ் அவர்கள் நன்றியுடன் கூட்டம் நிறைவேறியது.சுமார் 200க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

## நாகப்பட்டினம் மின்வட்டம்

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நாகப்பட்டினம் கிளையின் சார்பில் 08.03.2024 அன்று ஆக.4 நாள் 05.03.2024-ஐ ரத்து செய்திடவும், 12.02.2024 முத்தரப்பு ஒப்பந்தம் ரத்து செய்திடவும், G.O. 6 மற்றும் 7-ஐ ரத்து செய்திடவும், MOBILE APP மூலம் கணக்கீட்டு பணி ரத்து செய்திடவும், SOLAR ENERGY நுகர்வோரை தேடி செல்வதை நிறுத்திடவும் வலியுறுத்தி விளக்க ஆர்ப்பாட்டம் நாகப்பட்டினம் வட்ட மயிலாடுதுறை கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு மாலை 5.15 மணிக்கு திட்டத்தின் உபதலைவர் திரு. A. தனசேகரன் அவர்கள் துவக்க உரையாற்ற, மாநில செயலாளர் மற்றும் திட்டத்தின் தலைவர் திரு. K. செல்வராஜு அவர்கள் விளக்கவுரையாற்ற, கிளையின் செயலாளர் திரு. K. சாரதி அவர்கள் கோரிக்கை விளக்க கோஷம் வாசிக்க, TNEBREOS மயிலாடுதுறை கிளை செயலாளர் திரு. S. சேகர் அவர்கள், கிளையின் அமைப்பு செயலாளர் திரு. D. மகேந்திரன் அவர்கள் மற்றும் கிளையின் நிர்வாகிகள் திரு. N. சீனிவாசன், திரு. K. சேகர் ஆகியோர் உரையாற்ற தொழிலாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நாகப்பட்டினம் வட்டக்கிளை சார்பாக 28.02.2024 அன்று மாலை 5.15 மணிக்கு மேற்பார்வை பொறியாளர் நாகப்பட்டினம் முன்பு மின்வாரிய பிரிப்பு ஒப்பந்தமும் போராட்டமும் விளக்க கூட்ட ஆர்ப்பாட்டம் மாநில செயலாளரும், வட்டத்தின் தலைவர் திரு. K. செல்வராஜு அவர்கள் தலைமையேற்று முத்தரப்பு ஒப்பந்தத்தில் தொழிலுக்கும், தொழிலாளர்களுக்கும் மற்றும் ஓய்வூதியர்களுக்கும் உள்ள பாதிப்புகளை விளக்கி உரையாற்றி நாம் ஏன் கையொப்பம் இடவில்லை என்பதையும் அனைவரும் அறியும் வகையிலே எடுத்துரைத்து பேசினார்கள் அடுத்ததாக கிளையின் செயலாளர் திரு. K. சாரதி அவர்கள் ஆர்ப்பாட்ட விளக்க கோஷம் போடவும், திட்டத்தின் உபதலைவர் திரு. A. தனசேகரன் அவர்கள் நன்றியுரை வாசித்து கூட்டம் நிறைவு பெற்றது. கிளையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஓய்வுபெற்றோர் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

## திருநெல்வேலி மின்வட்டம்

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் திருநெல்வேலி கிளையில் 08-03-2024 அன்று BP. 4ஐ ரத்து செய்ய கோரியும். GO.67ஐ ரத்து செய்ய கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் திருநெல்வேலி மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு மாலை 5-20 மணிக்கு மண்டல செயலாளர்

திரு. S. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்ட விளக்க உரை மாநில உபதலைவர் திரு. N. முத்தையா அவர்கள். திட்ட செயலாளர் திரு. V. பாலசுப்ரமணியன், திட்டபொருளாளர் திரு. L.K. ரங்கநாதன். மத்திய அலுவலக செயலாளர் திரு. A.V. ராகவன். நன்றி உரை கிராமப்புற கோட்டச்செயலாளர் திரு. சங்கர நாராயணன் ஆகியோர் 25 பேர் கலந்து கொண்டனர்.

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் திருநெல்வேலி கிளையில் 29-02-2024 அன்று மின்வாரிய பிரிப்பு - ஒப்பந்தமும் பற்றிய விளக்க ஆர்ப்பாட்டம் திருநெல்வேலி மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு 5-20 மணிக்கு மாநில உபதலைவர் திரு. K. சிவசுப்புபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்ட விளக்க உரை மண்டல செயலாளர் திரு. S. இராமச்சந்திரன் திட்டசெயலாளர் திரு. V. பாலசுப்ரமணியன். திட்டப்பொருளாளர் திரு. L.K. ரெங்கநாதன், மகளிர் அணி திருமதி. மங்கலசுந்தரி நன்றி உரை திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் 59 பேர் கலந்து கொண்டன.

## திருவாரூர் மின்வட்டம்

08.03.2024 ஆர்ப்பாட்டம். BP 4 ரத்து செய்வது மின்வாரியங்களை பிரிப்பு ஒப்பந்தங்களை ரத்து செய்வது போன்றவற்றை விளக்கி திருவாரூர் வட்டம் மன்னார்குடி கோட்ட பொறியாளர் அலுவலக வாயிலில் தலைவர் சி ராமதாஸ் அவர்கள் தலைமையில், திரு டி. ராஜகோபால் அவர்கள் முன்னிலையில். தொழிலாளர்கள் ஒன்றுபட்டு போராட வேண்டிய அவசியத்தினை திட்டச் செயலாளர் முருக அருள் அவர்கள் விளக்கிப் பேசினார். மின்வாரிய பிரிப்பு ஒப்பந்தத்தின் பாதிப்புகள் குறித்து மன்னார்குடி கோட்டச் செயலாளர் ஜெயபால் அவர்கள் விளக்க உரையாற்றினார். முத்தரப்பு ஒப்பந்தத்தில் எம்பிளாயிஸ் பெடரேஷன் ஏன் கையொப்பமிடவில்லை என்பதனை பற்றி திருவாரூர் கோட்ட செயலாளர் ராஜாராமன் அவர்கள் பேசினார். திட்ட பொருளாளர் வெங்கடேசன் அமைப்புச் செயலாளர் தம்புசாமி ஆகியோர் விளக்கிப் பேசினர்.

## உடுமலை மின்வட்டம் மற்றும் மரபுசாரா எரிசக்தி

28.2.2024 அன்றைய ஆர்ப்பாட்டத்தில் உடுமலை மின்பகிர்மான வட்டம் மற்றும் மசாஎஆ வட்ட தோழர்கள் 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் மசாஎஆ சார்பாக 16 பேர் பங்கேற்றனர். 8.3.24 ஆர்ப்பாட்டத்தில் 100 பேர் பங்கேற்றனர்.

## மதுரை GCC, மதுரை மற்றும் மதுரை மாநகர் வட்டங்கள்

மதுரை வட்ட கிளைகள் சார்பாக BP 4ஐ ரத்து செய்யக்கோரி கண்டன ஆர்ப்பாட்டகூட்டம் மேற்பார்வை பொறியாளர் /மதுரை மத்திய அலுவலக நுழைவுவாயில் முன்பாக பெருநகர் திட்டசெயலாளர் திரு. M. டேவிட்பொன்னையா தலைமையில் 08-03-2024ந் தேதி அன்று மதியம் 01.30 மணியளவில் கூட்டம் ஒலி முழக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

அதில் மதுரை திட்ட செயல் தலைவர் திரு P. ஆண்டி அவர்கள் BP 4ஐ ரத்து செய்ய கோரியும் மற்றும் GO 6 மற்றும் 7யும் ரத்து செய்ய கோரியும் Mobile appல் ரீடிங் எடுக்க கட்டாயப்படுத்துவதை கைவிட வேண்டும் என்று விளக்கி பேசினார்.

GCC திட்ட செயலாளர் திரு. A. சேதுராமன் அவர்களும் இது சம்பந்தமாக விளக்கிப் பேசி அனைவருக்கும் நன்றி கூறினார். பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

மின்வாரிய முத்தரப்பு ஒப்பந்தத்தில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் கையெழுத்திடவில்லை, என்பதற்கான விளக்கக் கூட்டம் மதுரை மண்டல தலைமை பொறியாளர் அலுவலகம் முன்பாக 29-02-2024ந் தேதி மாலை 5.15 மணி அளவில் மதுரை திட்ட செயல் தலைவர் திரு. P. ஆண்டி தலைமையில் நடைபெற்றது.

இதில் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பொதுச் செயலாளர் திரு. அ. சேக்கிழார் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள், இதில் தற்போது வாரிய நிலையும் அதன் நடவடிக்கைகளையும் மேற்கோல்காட்டியும் முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ள சரத்துக்களை முழுமையாக ஆராய்ந்து அதில் உள்ள சாதகம், பாதகங்களை நன்றாக தெளிவாக விரிவாக விளக்கிப் பேசினார். மேலும் மதுரை திட்ட செயலாளர், திரு. எஸ் ராஜங்கம், பெருநகர் திட்ட செயலாளர், திரு. எம். டேவிட் பொன்னையா, மதுரை GCC கிளை செயலாளர் திரு. A. சேதுராமன், திண்டுக்கல் திட்ட செயலாளர் திரு. கே.ஆர். சுப்பிரமணியன், சிவகங்கை திட்ட செயலாளர், திரு. கே.ஆர்.கே. சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்த மாபெரும் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு வெற்றி பெற செய்த அனைத்து தோழர்கள் மற்றும் தோழியர்களுக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## கோபி மின்வட்டம்

1) கோபி கிளையின் சார்பில் 20-02-2024 ம் தேதி மின் வாரிய பிரிப்பும் - முத்தரப்பு ஒப்பந்தமும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் திட்டத்தின் தலைவர் ஆர். கிருஷ்ண மோகன் ராஜ் தலைமையில் மாநில துணைத் தலைவரும் திட்ட செயலாளரும் ஆன அ.மு. மணி சிறப்புரை ஆற்றினார் திட்ட பொருளாளர் கு. சந்திரன், கூடுதல் செயலாளர் வி.ஆர். செந்தில்குமார், அமைப்பு செயலாளர் எஸ். செந்தில் குமார், திட்ட துணைச் செயலாளர் எஸ். வெங்கடாசலம், மகளிர் அணி செயலாளர் த. நித்யா, மத்திய அலுவலக செயலாளர் பி. பிரபாகரன், கோபி கோட்ட தலைவர் பிரகாஷ், சத்தி கோட்ட செயலாளர் உத்தரசாமி மற்றும் மகளிர் உட்பட 100 பேர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கூட்ட முடிவில் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது. முன்னதாக 26, 27, 28 ஆகிய மூன்று நாட்கள் சத்தி, கோபி, பவானி கோட்டத்தின் அனைத்து பிரிவு அலுவலகத்திற்க்கும் சென்று அதிகாரிகள், அலுவலர்கள், தொழிலாளர்களை நேரில் சந்தித்து தலைமை வழங்கிய நோட்டீஸ் கொடுத்து நமது தொழிற்சங்கம் GO 100க்கு உரிய ஒப்பந்தத்தில் ஏன் கையொப்பமிட்டவில்லை என்பதை விளக்கம் அளித்து வந்தோம். 2) கோபி கிளையின் சார்பில் 08-03-2024ல் BP 4ஐ ரத்து செய்ய கோரி கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் திட்ட தலைவர் ஆர். கிருஷ்ண மோகன் ராஜ் தலைமையில் மாநில துணைத் தலைவரும் திட்ட செயலாளரும் ஆன அ.மு. மணி சிறப்புரை ஆற்றினார் திட்ட பொருளாளர் கு. சந்திரன், அமைப்பு செயலாளர் எஸ். செந்தில்குமார், கூடுதல் செயலாளர் வி.ஆர். செந்தில் குமார், பவானி கோட்ட செயலாளர் ப. செந்தில்குமார், மத்திய அலுவலக செயலாளர் பி. பிரபாகரன், கோபி கோட்ட தலைவர் பிரகாஷ் உட்பட திரளான தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

## தூத்துக்குடி மின்வட்டம்

தூத்துக்குடி மின் பகிர்மான வட்டத்தில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சார்பாக 28.02.2024 அன்று மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு, செயல் தலைவர் தோழர் மு. சிவஞானம் அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி திட்ட பொருளாளர் தோழர் P. ஜெயச்சந்திரன் திட்டச் செயலாளர் தோழர் N.D.S. அலெக்சாண்டர் மற்றும் ஓய்வு பெற்றோர் அமைப்பு சார்பாக அதன் மாநில பொதுச் செயலாளர் தோழர் P. சுடலை ஆகியோர் விளக்கவுரை ஆற்றினர். திட்ட இணைச் செயலாளர் தோழர் . வில்சன் நன்றி உரை ஆற்றினார். கூட்டத்தில் ஓய்வு பெற்றோர் 38 பேர் உட்பட 253 பேர் கலந்து கொண்டனர் ஆர்ப்பாட்ட நிகழ்வுகள் தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்தப்பட்டது .

அதுபோன்றே 08.03.2024 அன்று காலை கோவில்பட்டி கோட்ட அலுவலகம் முன்பு BP 4ஐ ரத்து செய்ய கோரியும் மொபைல் ஆஃப் வழியாக கணக்கீட்டாளர்களை கணக்கீடு செய்ய நிர்பந்திப்பதை கண்டித்தும் திட்டச் செயலாளர் தோழர் N.D.S. அலெக்சாண்டர் அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திட்ட இணைச் செயலாளர் தோழர் A. அலெக்ஸாண்டர் அன்பு செல்வன்/வ.மே. மற்றும் கோட்டச் செயலாளர் தோழர். K. தங்கராஜ் ஆகியோர் கோரிக்கையை குறித்து விளக்கிப் பேசினர். அன்று மாலை 5:20 மணி அளவில் தூத்துக்குடி மேற்பார்வை பொறியாளர் அலுவலக முன்பு செயல் தலைவர் தோழர். மு. சிவஞானம் அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்தில் திட்ட பொருளாளர் தோழர். P. ஜெயச்சந்திரன் திட்டச் செயலாளர் தோழர். N.D.S. அலெக்சாண்டர் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். ஆர்ப்பாட்ட நிகழ்வுகள் தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை ஊடகங்கள் வாயிலாக விளம்பரப்படுத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் 12 பெண் பணியாளர்கள் உட்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## பல்லடம் மின்வட்டம்

08.03.24 பல்லடம் திட்டம் தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்ட் எம்ப்ளாயீஸ் ஃபெடரேஷன் சார்பாக BP 4ஐ ரத்து, செய்யக்கோரி எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டம் பல்லடம் திட்ட செயலாளர் திரு. கந்தசாமி அவர்களது தலைமையில் பல்லடம் செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு நடைபெற்றது ஆர்பாட்டத்தில் எத்தீஸ் மாசிலாமணி மதுரை வீரன் மகளிர் அணியில் லட்சுமி தெய்வானை ரம்யா ராஜேஸ்வரி தீபா உட்பட 100க்கும் மேற்ட்டோர் கலந்து கொண்டனர் முடிவில் ரஞ்ஜித் நன்றி கூறினார்.

28.02.24 தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பல்லடம் திட்டத்தின் சார்பாக மின்வாரிய பிரிப்பும் முத்தரப்பு ஒப்பந்தமும் இந்த ஒப்பந்தத்தால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை விளக்கி எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டம் மேற்பார்வை பொறியாளர் பல்லடம் அலுவலகம் முன்பு நடைபெற்றது கூட்டத்திற்கு திட்ட தலைவர் G. அங்குராஜ் தலைமையில் நடைற்றது செயலாளர் S. கந்தசாமி பொருளாளர் S. சிவராஜ் முன்னிலை வகித்தனர். முத்தரப்பு ஒப்பந்தத்திற்கும் மின்சார வாரிய பிரிப்பிற்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டது கூட்டத்தில் அமைப்பு செயலாளர் A. தங்கவேல் இணைசெயலாளர் P. பால்ராஜ் மகளிர் அணி செயலாளர் க.சாந்தி காங்கயம் கோட்டசெயலாளர் அஜய்மூர்த்தி காங்கயம் கோட்டதலைவர் தனபால் உட்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் மின்வட்டம்

இன்று 29.02.2024 மாலை 5.15க்கு TNEBEF சார்பில் விழுப்புரம் மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயிலில் சிறப்பாக நடைபெற்ற மின் வாரிய பிரிப்பு - ஒப்பந்தமும் போராட்டமும் விடுபட்ட 5000 கேங்மேன் தொழிலாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யவும், பகுதி நேர பணியாளர் நிரந்தரம் செய்யவும் BP 4ஐ சரத்தை முழுவதுமாக நீக்கப்படவும் விழுப்புரம் வட்ட தலைவர் திரு. திருலை, வட்ட செயலாளர் திரு. சேகர், கள்ளக்குறிச்சி வட்ட செயலாளர் திரு. வே. பாண்டியன், வட்ட தலைவர் திரு. ப. முருகன், வட்ட செயல் தலைவர் திரு. நா. ஆனந்தராமன், கோட்ட தலைவர் திரு. ஜெய்சங்கர் மற்றும் திருவண்ணாமலை வட்ட செயலாளர் திரு. பஞ்சமூர்த்தி மற்றும் அனைத்து வட்ட, கோட்ட ஊழியர்கள், ஒப்பந்த தொழிலாளர்களும் கலந்து கொண்டு இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை சிறப்பாக நடத்தினர்.

## செங்கல்பட்டு மின்வட்டம்

மார்ச் 08:03:2024 அன்று மாலை: 05:20 மணிக்கு மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் செங்கல்பட்டு நடைபெற்ற BP 4, 05.03.2024 எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தலைமை: திரு நாகபிள்ளை திட்ட தலைவர், வரவேற்புரை: திரு. கார்த்திக், திட்ட இணை செயலாளர்கள், திருமதி: பஷிலத் பேகம், மகளிர் அணி, சிறப்புரை: திரு தயாநிதி, மாநில இணை செயலாளர், திட்ட அமைப்பு செயலாளர், திரு. மாணிக்கம், ஸ்ரீ பெரும்புதூர் கோட்ட அமைப்பு செயலாளர், திரு கருணாகரன், திட்ட செயலாளர், நன்றிரை : திருமதி சுகுணவள்ளி, மகளிர் அணி செயலாளர்.

செங்கல்பட்டு TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தொழிற்சங்கத்தின் சார்பாக மின்வாரிய பிரிப்பு முத்தரப்பு ஒப்பந்தமும் பற்றி கோரிக்கை விளக்கக் கூட்டம் பிப் : 28.2.2024 அன்று மாலை 5:20 மணிக்கு மேல் மேற்பார்வை பொறியாளர் செங்கல்பட்டு அலுவலகம் நுழைவாயில் முன்பாக நடைபெற்ற கூட்டத்தில் முத்தரப்பு ஒப்பந்தத்தில் உள்ள குறைகளை சரி செய்ய வேண்டிய விளக்க கூட்டத்திற்கு திட்ட தலைவர் திரு. நாகபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரை: ஸ்ரீ பெருமந்தூர் கோட்டா அமைப்பு செயலாளர் திரு. மாணிக்கம் அவர்கள் உரையாற்றினார்.

சிறப்புரை: மாநில இணை செயலாளரும் அமைப்பு செயலாளர் ஆன திரு : தயாநிதி அவர்களும், திட்டத்தின் செயலாளரும் திரு கருணாகரன் அவர்களும் திட்ட மகளிரணி செயலாளர் திருமதி. சுகுணவள்ளி அவர்களும் உரையாற்றினார்கள் நன்றியுரை : திட்ட பொருளாளர் திரு சீனிவாசன் அவர்கள் கூறினார் பிறகு கோஷமிட்டு கூட்டத்தை முடிக்கப்பட்டது இக்கூட்டத்தில் தொழிலாளர்கள் 100 நபர்கள் கலந்து கொண்டனர்.

## தேனி மின்வட்டம்

தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தேனி கிளையின் சார்பாக BP 4ஐ ரத்து செய்யக் கோரி கண்டன ஆர்ப்பாட்ட கூட்டம் மேற்பார்வைபொறியாளர்/தேனி அலுவலக நுழைவு வாயில் முன்பாக திட்டதலைவர் திரு. M. மகாலிங்கம் தலைமையில் 8.3.2024 அன்று மதியம் 01.30 மணியளவில் கூட்டம் நடைபெற்றது. அதில் திரு R. காமராஜன், மாநில இணைச் செயலாளர்/பொருளாளர், திரு R. விவேகானந்தன் அமைப்பு செயலாளர் திரு K. முருகேசன்

சின்னமனூர், கோட்டச் செயலாளர் ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். திரு. R. மூக்கையா மாநில / திட்டச் செயலாளர் சிறப்புரை வழங்கிய பின்பு திரு P. இருளப்பன் உபதலைவர் நன்றி உரை வழங்கி கூட்டம் இனிதே முடிக்கப்பட்டது.

தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தேனி கிளையின் சார்பாக மின்வாரிய பிரிப்பும்- முத்தரப்பு ஒப்பந்தமும், ஒப்பந்தத்தில் ஏன் கையொப்பம் இடவில்லை என்பதற்கான விளக்க ஆர்ப்பாட்ட கூட்டம் மேற்பார்வை பொறியாளர்/ தேனி அலுவலக நுழைவு வாயில் முன்பாக 28.2.2024 அன்று மாலை 5.20 மணியளவில் வட்டக் கிளை தலைவர் திரு, M. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் திரு. R. காமராஜன், மாநில இணைச்செயலாளர்/பொருளாளர், திரு R. விவேகானந்தன் அமைப்பு செயலாளர் திரு P. சரவண குமார் உபதலைவர் திரு P. இருளப்பன் உபதலைவர் திரு K, முருகேசன் சின்னமனூர் கோட்ட செயலாளர், திரு K, தங்கபாண்டியன் உபதலைவர் ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள், திரு R. மூக்கையா மாநில/திட்டச்செயலாளர் சிறப்புரை வழங்கிய பின் திரு R, கண்ணன் நன்றியுரை வழங்கி இனிதே கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

## கடலூர் மின்வட்டம்

BP No.4 Dt.05.03.2024-ஐ ரத்து செய்யக் கோரியும், 12.02.2024 முத்தரப்பு ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரியும், GO 6 மற்றும் 7 Dt. 24.01.2024-ஐ ரத்து செய்யக் கோரியும், Mobile App-ல் கணக்கீட்டு பணிக்கு உத்தரவிட்டதை ரத்து செய்யக் கோரியும் மற்றும் Solar Energy நுகர்வோரை தேடிச் செல்வதை நிறுத்திடக் கோரியும் 08.03.2024 அன்று மாலை கடலூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயிலில் நடைபெற்ற மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டத்தில் கடலூர் திட்ட செயலாளர் D. மணிமாறன், கடலூர் திட்ட செயல் தலைவர் திரு. ரமேஷ் பண்ருட்டி கோட்ட தலைவர் திரு. K. வெங்கடேசன் ஒப்பந்த தொழிலாளர் திரு. பாலச்சந்தர் திரு. கார்த்திக் மற்றும் நீதிமன்ற பணி உத்தரவு பெற்ற IOL தொழிலாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட மூவர் கலந்து கொண்டனர்.

கடந்த 28 02.2024 அன்று TANGEDCO-வை மூன்று கம்பெனிகளாக பிரிப்பது எதிர்த்தும் முத்தரப்பு ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமைகளை விளக்கியும் கடலூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயிலில் நடைபெற்ற மாநிலம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டத்தில் கடலூர் திட்ட செயலாளர் D. மணிமாறன் தலைமையேற்று சிறப்புரை: 1) கடலூர் திட்ட தலைவர் திரு. R. வெங்கடேசன் 2) சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சீர்காழி கோட்ட செயலர் திரு. S. ஆனந்தகுமார் 3) நாகை திட்ட இணைச் செயலாளர் திரு. K. சேகர் மற்றும் 4) நாகை திட்ட துணைத் தலைவர் திரு. C. ரமேஷ் குமார் நன்றி உரை: கடலூர் திட்ட பொருளாளர் திரு. N. ஜெய்சங்கர் மேலும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கடலூர் திட்ட அமைப்பு செயலர் திரு. R. நாகராஜன், திட்ட செயல் தலைவர் திரு ரமேஷ், கடலூர் மாநகர் திட்ட செயலர் திரு. சீனிவாசலு பண்ருட்டி கோட்டச் செயலாளர் திரு. R. மனோகரன் ஒப்பந்த தொழிலாளர் திரு.பாலச்சந்தர் திரு. கார்த்திக் மற்றும் 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

## கரூர் மின்வட்டம்

கடந்த 28.02.2024 மாலை 05.20 மணி அளவில் கரூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக மின்சார வாரியத்தை மேலும் மூன்று கம்பெனிகளாக பிரிப்பதை எதிர்த்தும்

கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் முத்தரப்பு ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள பாதகமான நிலைகளை விளக்கியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கரூர் கிளையின் செயலாளரும் மாநில இணைச் செயலாளருமான திரு L. முருகவேல் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் கரூர் கிளையின் அமைப்புச் செயலாளர் திரு P. வீரமணி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும் ஆர்ப்பாட்டத்தில் கிளையின் செயல் தலைவர் திரு S. பாஸ்கர் மற்றும் கரூர் கிராமிய கோட்டச் செயலாளர் திரு கே. தியாகராஜன், குளித்தலை கோட்ட செயலாளர் திரு கோபாலகிருஷ்ணன், தலைவர் சாமிநாதன் மற்றும் பொறுப்பாளர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் மின்வாரிய பிரிப்பை கண்டித்தும் முத்தரப்பு ஒப்பந்தத்தில் பல சாதகமான அம்சங்கள் இடம்பெறாதது குறித்தும் BP2 ரத்து செய்ய கோரியும் கேங்மேன் பணியாளர்களுக்கான ஊர் மாறுதல் உத்தரவு கள உதவியாளராக மாற்றுவது தேர்வு செய்யப்பட்டுள்ள மீதமுள்ள ஐந்தாயிரம் ஜெர்மன் பணியாளர்களை நியமிப்பது காலி பணியிடங்களை நிரப்புவது உள்ளிட்ட கோரிக்கைகள் கோஷங்களாக எழுப்பப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் கிராமிய கோட்டத்தின் செயலாளர் திரு கே. தியாகராஜன் அவர்கள் நன்றி உரையுடன் கண்டன ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது. மேலும் கடந்த 08.03.2024 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு குளித்தலை கோட்டத்தின் செயலாளர் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் கரூர் கிளையின் அமைப்புச் செயலாளர் திரு வீரமணி அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் குளித்தலை கோட்டத்தில் தலைவர் சாமிநாதன் உட்பட பலர் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தை சிறப்பித்தனர்.

## கள்ளக்குறிச்சி மின்வட்டம்

இன்று 28.02.2024 மாலை 5.15 மணிக்கு கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டத்தில் மின்வாரிய பிரிப்பிற்கான ஒப்பந்தத்தை எதிர்த்து போராட்டமும் கண்டன ஆர்ப்பாட்டமும் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக நடைபெற்றது இதில் வட்ட செயலாளர் திரு. வே. பாண்டியன் அவர்களும், வட்ட தலைவர் திரு. ப. முருகன் அவர்களும் வட்ட அமைப்பு செயலாளர் திரு. ஜெய்சங்கர் அவர்களும், வட்ட செயல் தலைவர் திரு. நா. ஆனந்தராமன் அவர்களும், வட்ட பொருளாளர் திரு. ராஜேந்திர பிரசாத் அவர்களும் கள்ளக்குறிச்சி கோட்ட தலைவர் திரு. ரா. ஜெய்சங்கர், அவர்களும் சங்கராபுரம் கோட்ட தலைவர் திரு. அ. மணிவண்ணன் அவர்களும், உளுந்தூர்பேட்டை வட்டத்தலைவர் திரு. பாரததாஸ் அவர்களும் மற்றும் அனைத்து கோட்டங்களில் இருந்து வந்த களப்பணியாளர்கள், ஒப்பந்த தொழிலாளிகள், பகுதிநேர பணியாளர்கள் உள்பட கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சிவகங்கை மின்வட்டம்

28.2.24 மற்றும் 8.3.24-ல் நடைபெற்ற போராட்ட களத்தில் சிவகங்கை மின் திட்டம். சுதந்திரப் போராட்டம் முதலில் தொடங்கிய இடம் சிவகங்கை மாவட்டம் அந்த வகையில் நமது தொழிற்சங்கமான TNEB எம்ப்ளாய்ஸ் பெடரேஷன் சார்பில் எழுச்சியுடன் நமது ஒற்றுமையை வெளிப்படுத்துகின்ற நிகழ்வாக போராட்ட களம் அமைந்திருந்தது. போராட்டத்தின் நோக்கம் குறித்த சுற்றறிக்கை மேற்பார்வை பொறியாளர் முதல் அனைத்து தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

போராட்டம் ஆனது திரு வி. சாத்தையா திட்ட தலைவர் அவர்கள் தலைமையிலும் செயல் தலைவர் கே.ஆர். காளிமுத்தன் மாநில இணைச்செயலாளர் திரு. கு. செல்லப்பன் மற்றும் திட்ட

பொருளாளர். K. ஆனந்த் செல்வம் முன்னிலையில் நடைபெற்றது. கோட்ட நிர்வாகிகள் சிறப்பாக பேசினார்கள். ஒலி முழக்கம் சிறப்பாக ஒலிக்கப்பட்டது. இறுதியாக கோரிக்கைகளை வலியுறுத்தி திட்ட செயலாளர் உரையாற்றினார்கள்ஆர்ப்பாட்டம் 5.15 மணிக்கு தொடங்கி 7 மணிக்கு முடிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பிற சங்கத்தில் இருந்து தோழர்கள் நமது சங்கத்தில் தாமாக உறுப்பினராக இணைந்தது மூலம் நமது சங்கம் பொறியாளர் அலுவலர் தொழிலாளர் என அனைவருக்கும் பொதுவான ஏற்றத்தாழ்வற்ற பொதுவுடமை சித்தாந்தத்தை உள்வாங்கிய இயக்கம் என்பது சிவகங்கை கிளையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மின் திட்டத்தில் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் என்ற நமது சங்கத்தை தவிர்த்து போராட்ட களம் அமைக்க முடியாது என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு கூறலாம்.

நிர்வாகம் மற்றும் தொழிலாளர் மத்தியில் நமது இயக்கம் நன் மதிப்பை பெற்றுள்ளது என்பதை நிரூபிக்கும் விதமாக போராட்ட களம் சிறப்பாக அமைந்தது.

## MTPS

08.03.2024 மாலை 5.20க்கு கண்டன ஆர்ப்பாட்டம் தொடங்கி 6.30 மணி வரை நடந்தது. தலைமை: G. சந்தோஷ் குமார் கிளை தலைவர், சிறப்புரை 1) எஸ். தெய்வன் கிளை செயலாளர் 2) ஆர் பிரகாசம் மாநில இணை செயலாளர், 3) நன்றியுரை ஜி. அண்ணாமலை கிளை பொருளாளர், கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள் திரு. அப்புசாமி பி.சி. கிளை செயலாளர் மற்றும் தோழர்கள். திரு. கனகராஜ் MTPS கிளை அமைப்பு செயலாளர். (10 தோழர்கள் கலந்துகொண்டனர்)

MTPS வாயில் முன் 8.3.2024 மாலை 5.20 மணி தொடங்கி 6.30 மணி வரை கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது 1. மொபைல் App. மூலம்தான் reading எடுக்க வேண்டும். இல்லையேல் நடவடிக்கை எடுக்கப்படும் என கணக்கீட்டாளர்களுக்கு மிரட்டல். விடப்படுகிறது. யார் குரல் கொடுப்பது?

2. BP 4/5.3.2024 கண்டித்து இதன் மூலம் 62 EE, 220 AE/JE பதவிகளை தன்னிச்சையாக வாரியம் ரத்து செய்துள்ளதை கண்டித்து.

3. துணை மின் நிலைய அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் பணி நெருக்கடி மற்றும் மன உளைச்சல். யார் தீர்ப்பது?

4. மொபைல் இல்லாத அல்லது பட்டன் மொபைல் வைத்துள்ள கணக்கீட்டாளர்களுக்கு நிர்வாகம் என்ன செய்ய போகிறது?

5. நெட் கனெக்ஷன், ரீ சார்ஜ் செய்வது, யார் பணத்தில்?

6. பிரிவு அலுவலரின் Imperestலிருந்து தரப்படுமா? கேள்வி எழுகிறது.

7. ஒரு சர்வீஸ் இல் ரீடிங் எடுக்க குறைந்தது 6 முதல் 10 நிமிடமாகிறது. முழுமையாக கணக்கீடு முடியாமற் போனால் யார் பொறுப்பு? அதிகாரியா? தொழிலாளியா? என வலியுறுத்தி பேசினர்.

# நாமக்கல் மின்வட்டம்

நாமக்கல் திட்ட கிளையில் மாநில தலைமையால் அறிவிக்கப்பட்ட மின் வாரிய பிரிப்பு ஒப்பந்தமும் போராட்டமும் என்று 28.02.2024 ல் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு முன் கூட்டியே மாநில தலைமையால் வழங்கபட்ட துண்டு பிரசுரங்களை தொழிலாளர் மத்தியில் வழங்கப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டிய தற்கான சூழ்நிலைகளை எடுத்து கூறப்பட்டு ஆர்ப்பாட்டம் சிறப்புடன் நடை பெற்றிட அதற்கான முன்னேற்பாடுகள் (காவல்துறை, பத்திரிகை துறைக்கு தகவல் அளித்தல், மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயிலில் பிளக்ஸ் வைத்தல், பேனர்) செய்யப்பட்டு அன்றைய ஆர்ப்பாட்டத்தில் 80க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உடன் திட்ட தலைவர் திரு பழனிசாமி அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடத்தப்பட்டது ஆர்ப்பாட்டத்தில் இன்றைய வாரியத்தின் நிலையினையும் முத்தரப்பு ஒப்பந்தத்தில் நமது தொழிற்சங்கம் ஏன் கையொப்பம் இடவில்லை என்பது குறித்து விளக்கி தொழிலாளர்கள் மத்தியில் பேசப்பட்டது மேலும் 08.02.2024ல் BP 4 dt 5.3.24க்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நாமக்கல் திட்ட கிளையில் பல்வேறு நிகழ்ச்சிகளின் காரணமாக பெரும்பாலான கோட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ள இயலாத நிலையில் பெரும்பாலான கணக்கீட்டு பணியாளர்கள் அன்றைய ஆர்ப்பாட்டத்தில் அதிக அளவில் கலந்து கொண்டது ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வண்ணம் இருந்தது காரணம் இதுவரை நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கணக்கீட்டு பணியாளர்கள் யாரும் கலந்து கொண்டதில்லை அன்றைய ஆர்ப்பாட்டதிலும் 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டு ஆக்ரோஷமாக ஒலி முழக்கம் எழுப்பினார்கள் மேற்கண்ட இரு நாட்களும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக நாமக்கல் திட்ட கிளையில் நமது தொழிற்சங்கம் வலுவான அமைப்பாக உருவெடுத்துள்ளதை பிரதிபலிக்கும் வகையில் இருந்தது இருநாட்களும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக நாமக்கல் திட்ட கிளையில் நமது தொழிற்சங்கத்தினை அடுத்த கட்ட நகர்வுக்கு கொண்டு செல்லவும் நிர்வாகிகளுக்கும் நல்லதொரு வாய்ப்பினையும் அனுபவத்தையும் ஏற்படுத்தியது மேலும் இனி வரும் காலங்களில் தலைமை அறிவிக்கும் ஆர்ப்பாட்டத்தினை சிறப்புடன் நடத்திட உத்வேகத்தினை அளித்துள்ளது.

மேட்டூர் அனல் மின் நிலைய கிளை, 28.02.2024 காலை 8.00 முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடாததற்கான காரணம் அரசாணை 100ல் பிரிக்கப்பட்ட கம்பெனிகளின் வருவாய்க்கு உட்பட்டுதான் (Cash flow of the operation of the transferee) என்பது தானே இருக்கிறது!

அடுத்துவரும் நிறுவனங்களின், (successor corporate entity) வருமானம் குன்றினால் அதன் நிலை என்ன?அல்லது கடனில் மூழ்கினால் நிலை என்னவாகும்?

ஓய்வூதியத்திற்க்கான நிதி குறித்த ஆதாரம் என்ன? ஆந்திரா, கர்நாடகா, குஜராத், கேரளா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சாதகமான பல அம்சங்கள் தமிழ்நாட்டில் போடப்பட்ட ஒப்பந்தத்தில் இடம் பெறாதது ஏன்? முழுமையான பேச்சுவார்த்தை நடத்திட வாரியம் முன் வரவில்லலை.

எனவே, மின்வாரிய தொழிலாளர்களையும், பொறியாளர்களையும், அலுவலர்களையும், ஓய்வூதியர்களையும் பாதுகாத்திட முடிவு செய்தே அவர்களது நலனுக்கும், வாரிய நலனுக்கும் முரணான கருத்துக்கள் நீக்க கோரி கண்டன ஆர்ப்பாட்டம்.

தலைமை : ஆர் பிரகாசம் மாநில இணைச்செயலாளர், சிறப்புரை ஜி.கே பாலகிருஷ்ணன் மாநில செயலாளர், நன்றியுரை கு. தெய்வன் கிளைச் செயலாளர், கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்கள், திரு. அப்புசாமி பி.சி. வட்ட செயலாளர், திரு. அப்பர்சாமி MEDC கிளைப்பொருளாளர், செல்வி பிரியங்கா பணிமனை வட்ட செயலாளர், திரு. முருகன் பணிமனை வட்ட தலைவர்.

## கள்ளக்குறிச்சி மின்வட்டம்

TNEBEF கள்ளக்குறிச்சி திட்டத்தில் BP4 ஐ ரத்தது செய்ய கோரி கண்டன ஆர்ப்பாட்டம் திட்ட செயலாளர் வே.பாண்டியன், மாநில இணைச்செயலாளர் கி. ஜெய்சங்சங்கர், திட்ட செயல் தலைவர் நா. ஆனந்தராமன் கள்ளக்குறிச்சி கோட்ட செயலாளர், இரா. ரவிச்சந்திரன், சங்கராபுரம் கோட்டத்தலைவர் அ. மணிவண்ணன் மற்றும் அனைத்து களப்பணியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

## சென்னை தெற்கு-II

TNEBEF எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சென்னை தெற்கு திட்டம் - 2ன் சார்பாக மின்வாரிய பிரிப்பும் - முத்தரப்பு ஒப்பந்தமும் என்ற கோரிக்கை விளக்க கூட்டம் (28-02-2024) அன்று மாலை 5.15 மணியளவில் ITC செயற்பொறியாளர் அலுவலக வாயிலில் (TIDEL PARK COMPLEX) திட்ட தலைவர், P. டென்னிஸ் அவர்கள் முன்னிலையில், திட்ட செயலாளர் Lion R. ராஜேஷ்பாபு அவர்கள் தலைமையில், சிறப்பாக நடைபெற்றது. கோட்ட செயலாளர்கள் J. பார்த்தசாரதி (ITC), K. முரளி (Adayar) K. பவானி (மகளிர் அணி) புருஷோத்தமன் தி.து.த மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதே போல் TNEB எம்ப்ளாயிஸ் பெடரேஷன் சென்னை தெற்கு திட்டம் - 2 ன் சார்பாக கோரிக்கை விளக்க ஆர்பாட்டம் (08-03-2024) அன்று மாலை 5.15 மணியளவில் ITC செயற்பொறியாளர் அலுவலக வாயிலில் (TIDEL PARK COMPLEX) திட்ட பொருளாளர் R. ஹரி அவர்கள் முன்னிலையில், திட்ட தலைவர் மற்றும் செயலாளர் Lion R. ராஜேஷ்பாபு P. டென்னிஸ் அவர்கள் தலைமையில், சிறப்பாக நடைபெற்றது. திட்ட து.தலைவர் புருஷோத்தமன் நன்றியுரை ஆற்றினார். மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## இராமநாதபுரம் மின்வட்டம்

இராமநாதபுரம் மின் திட்டம். இராமநாதபுரம் கோட்டத்தில். R.S மங்கலத்தில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சார்பாக 08.03.2024 இன்று வாரிய BP 4, Dt.5.3.24 யை எதிர்த்து ரத்து செய்ய வலியுறுத்தி நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம். திட்ட பொருளாளர். கு. பால்ராஜ் தலைமையில் நடைபெற்றது. அதில். திட்ட செயலாளர். R. வீரசேகர் சிறப்புரையாற்றி.கண்டனம். ஆர்ப்பாட்டம் நிறைவு செய்யப்பட்டது.

28.02.2024 மாலை 5.15 அன்று தமிழக மின்சார வாரியத்தை கண்டித்து இராமநாதபுரம் மின் திட்டத்தின் சார்பாக இராமநாதபுரம் மேற்பார்வை பொறியாளர். அலுவலக நுழைவாயிலில் முத்தரப்பு. ஒப்பந்த பிரிப்பும் அதில் உள்ள பாதகமான. செயலை கண்டித்து. அதில் நமது TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் ஏன் கையெப்ப மிடவில்லை என்பதை விளக்கியும் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் திட்ட தலைவர் திரு V. காதர்பாட்ஷா திட்ட செயலாளர் திரு ரா. வீரசேகர் மற்றும் பொருளாளர் திரு S. பால்ராசு. செயல் தலைவர் திரு S. பன்னீர் செல்வம் அமைப்பு செயலாளர். திரு P. முத்துராமலிங்கம் திட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி M. காயத்ரி இராமநாதபுரம் கோட்ட செயலாளர் திரு S. கௌதம் பரமக்குடி. கோட்ட செயலாளர். திரு K. மாரிமுத்து நன்றியுரையாற்றி நிறைவடைந்த ஆர்ப்பாட்டத்தில் அதில் சுமார் 50க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## தஞ்சை மின்வட்டம்

கடந்த 28.2.2024 அன்று நடைபெற்ற ஒப்பந்த பிரிப்பு விளக்க ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் திரு மோகன் தாஸ் தலைமையில் நடைபெற்றது மண்டல செயலாளர் மற்றும் செயல் தலைவர் அமைப்புச் செயலாளர் திட்டத் துணைச் செயலாளர் ஒரத்தநாடு கோட்ட தோழர்கள் நகரிய கோட்ட தோழர்கள் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்றனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் 39 பேர் கலந்து கொண்டனர்.

## கோவை மின்வட்டங்கள்

28.02.2024 மாலை 5.20 மணி கோவை தலைமை பொறியாளர் அலுவலக வாயிலில் சுமார் 150க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கள் கைகளில் கோரிக்கை வாசகங்கள் அடங்கிய பலகைகளை கையில் ஏந்தி அணிவகுத்து நின்றனர். 100 மேற்பட்ட தோழர், தோழியர்கள் தங்கள் கைகளில் TNEBEF இரட்டை கோபுர செங்கொடிகளை உயர்த்தி பிடித்து அரணமைத்து நின்றனர்.

சூரியன் தன் மாலை நேர செங்கதிர்களால் ஆசீர்வதித்து இரட்டை கோபுர செங்கொடிகளை வெற்றி கொடிகளாக பிரகாசப்படுத்தினார்.கோவை தெற்கு, வடக்கு,மாநகர் மற்றும் GCC பொறுப்பாளர்கள் உள்ளடங்கிய 350 மேற்பட்ட தொழிலாளர் தோழர்கள், தோழியர்கள் மற்றும் அலுவலர்களுடன் ஆர்ப்பாட்டக் களம் தயாரான நிலையில் நமது மாநில பொதுச் செயலாளரும், மாநில பொருளாளரும் ஆர்ப்பாட்டக் களத்தில் கலந்தனர்.

கோவை வடக்கு வட்ட பொருளாளர் திரு. R. சிவப்பிரகாஷ் அவர்களுடன் தொழிலாளர்களின் கோஷங்கள் அந்த வளாகத்தை அதிர செய்ய, நமது மாநில பொருளாளர் மதிப்பிற்குரிய திரு. J.L. பாஸ்டின்ராஜ் அவர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டக் கூட்டம் இனிதே துவங்கியது. ஓய்வறியா சங்க உழைப்பாளர் திரு. G. காமராஜ் கோவை மாநகர் வட்ட பொருளாளர் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து சங்கத் தளபதிகளான திரு. A. கண்ணாதுரை, மாநில உபத்தலைவர், திரு. A. காதர் இப்ராஹிம் மாநில இணை செயலாளர், திரு. K.P. சீனிவாசன், கோவை மண்டல செயலாளர், திரு. A. முருகவேல், கோவை வடக்கு வட்ட செயலாளர், திரு. M. ராஜேந்திரன். செயலாளர். GCC கோவை மற்றும் திருமதி M. பாரதி மாநில மகளிர் அணி செயலாளர் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

மாநில பொதுச் செயலாளர் திரு.அ.சேக்கிழார் அவர்களின் பேச்சில் மின்வாரிய பிரிப்பு மற்றும் ஒப்பந்தத்தில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி பேசியதில் உண்மைகளை உணர்ந்து ஒப்பந்தத்தை திரும்ப பெறும் வரையில் தொடர்ந்து போராட வேண்டும், மின்வாரியத்தை காக்க வேண்டும் என்ற உணர்வுகள் மனதில் எழுச்சிபெற அடுத்த கட்ட போராட்டத்திற்கு நாம் தயாராகிக் கொண்டிருந்தோம் என்பதே உண்மையாகும். மேலும் TNEB எம்ப்ளாயிஸ் பெடரேசன் சங்கம் வாரியத்தையும், தொழிலாளர்களையும் காப்பதற்கு தொடர்ந்து போராடும் என்ற நம்பிக்கையை விதைத்து தன் உரையை நிறைவுபடுத்தினார். அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அண்ணன் திரு. I. லியோபால், தெற்கு வட்ட பொருளாளர் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேசன் வாழ்க! வாழ்க!

இரட்டை கோபுர செங்கொடி வாழ்க! வாழ்க! என்ற கோஷத்துடன் ஆர்ப்பாட்டம் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

TNEB எம்பாய்ஸ் பெடரேஷன் சங்கத்தின் தொடர் போராட்டமாக 08.03.2024, மாலை 5:20 மணிக்கு கோவை டாடாபாத் தலைமை பொறியாளர் அலுவலக நுழைவு வாயிலில் ஆ.க..4. நாள்.05.03.2024. உத்தரவுக்கு எதிராகவும் மேற்கண்ட உத்தரவை ரத்து செய்யக் கோரியும், தொழிலாளர்கள், பொறியாளர்கள் கோரிக்கைகளை உள்ளடக்கிய கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் சுமார் 100க்கு மேற்பட்ட தொழிலாளர்களுடன் எழுச்சியுடன் நடைபெற்றது.